மலர் : 51 இதழ் : 9

தமிழரசு

மார்ச் 2021
விலை ரூ. 20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

ந.வளர்மதி

டாக்டர்.சாந்தா

ஸ்வாதி மோகன்

சாதனை பெண்மணிகள்

மார்ச் 3

உலக வனவிலங்கு தினம்

மார்ச் 11

உலக சிறுநீரக தினம்

மார்ச் 15

உலக நுகர்வோர் உரிமைகள் தினம்

மார்ச் 20

உலக மகிழ்ச்சி தினம்

மார்ச் 20

உலக சிட்டுக்குருவிகள் தினம்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி வருடம் : மாசி – பங்குனி
மார்ச் 2021
மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 9

ஆசிரியர் - வெளியிடுபவர்
தெ. பாஸ்கர பாண்டியன் இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
சீ. ராஜன்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
எஸ். சீதாலட்சுமி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. கமலா
ச. மஞ்சுளா
பெ. சதீஷ்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
அ. மதன்
போ. முத்துக்குமார்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

“மங்கையா ராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!
பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ – இந்தப்
பாரில் அறங்கள் வளரும், அம்மா!”

– கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

இந்த இதழில்...

சர்வதேச பெண்கள் தினம் 4

புற்றுநோயின் எதிரி, நோயாளிகளின் கலங்கரைவிளக்கம் டாக்டர் சாந்தா 6

‘செவ்வாய் பெண்மணி’ ஸ்வாதி மோகன் 10

வெள்ளையனுக்கு அஞ்சாத அஞ்சலையம்மாள் 12

இசைக் குயில் எம்.எஸ்.சுப்புலெட்சுமி 17

உலக சிறுநீரக தினம் 20

வனங்களை பாதுகாப்பதன் அவசியம் ஏன் ? 22

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்கள் 2021 மற்றும் கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத் தேர்தல் 30

முதலாம் பக்க அட்டை

பல துறைகளில் சாதனைப் புரிந்த
பெண்மணிகள்

20 ஆம் நூற்றாண்டில் பல பெண்கள் உலக அளவில் பிரபலம் அடைந்திருந்தாலும் பெண்களின் வாழ்க்கை நிலையானது மிகக் கொடுமையாகவே உள்ளது என்பதை நாம் ஏற்றுக் கொண்டாகத்தான் வேண்டும். உலகில் உள்ள எழுத படிக்கத் தெரியாத 900 பில்லியன் மக்களில் 600 பில்லியன் பெண்கள் ஆவர். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்கிற கருத்து இன்னும் தொடர்கிறது என்பதையே , இது காட்டுகிறது.

19ஆம் நூற்றாண்டுவரை பெண்கள் தந்தை அல்லது கணவரின் சொத்தாகவே கருதப்பட்டனர். தங்களின் வாழ்க்கையைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் உரிமைகூட அவர்களுக்கு இல்லை. இன்றைக்கு இதில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், இதே நிலைதான் நீடிக்கிறது, பேச்சுரிமை, கல்வி, வேலை, ஓட்டுப் போடும் உரிமை போன்றவை இன்றைக்கும் பல நாடுகளில் பெண்களுக்கு மறுக்கப்படுகிறது.

பெண் உரிமை

பிரெஞ்சுப் புரட்சியானது 1789 முதல் 1799வரை நடந்தது. இதன்மூலம் ஆண்களுக்கு உரிமை (Right's of Man) கிடைத்தது. ஆண்களுக்கு உரிமை கிடைத்ததுபோல் பெண்களுக்கும் கொடுக்க வேண்டும் என பிரெஞ்சுப் பெண்மணி ஒலிம்பி டீ கௌகீஸ் (Olympe de Geuges) என்பவரும், ஆங்கிலப் பெண்மணியான மோரி உல்ஸ்டான்கிராப் (Mary Wollstone craft) என்பரும் வாதிட்டனர். ஆகவே பெண் சமத்துவத்திற்கான போராட்டம் என்பது 19ஆம் நூற்றாண்டிலேயே துவங்கிவிட்டது.

ரஷ்யப் புரட்சியின் பலனாக பெண்களுக்கு ஓட்டுரிமை, நஷ்டஈடு, சமஊதியம், கருகலைப்பு, சம்பளத்துடன் 6 வார பிரசவ விடுப்பு., படிப்பு, கல்வி, சொத்தில் பங்கு போன்ற உரிமைகள் கிடைத்தன. அதன் பின்னர்தான் மற்ற நாடுகளிலும் கிடைத்தது. பெண் சமத்துவம் என்பது ஆண்களுக்கு எதிரான தத்துவமோ அல்லது கண்ணோட்டமோ அல்ல, அது பெண்களையும், ஆண்களைப்போல் தலை நிமிர்ந்து வாழ வைக்கக் கூடியதாகும்.

பெண்கள் தினமான முதலில் மார்ச்8 ஐ நியூயார்க் நகரில் 1857ஆம் ஆண்டிலேயே கொண்டாடினார்கள். சர்வதேச சோசலிஸப் பெண்கள் மாநாடு கோப்ஹனில் 1910ஆம் ஆண்டு நடந்தது. அந்த மாநாட்டில் பெண்களுக்கான தினத்தை அறிவித்தது. பெண்கள் வீதியில் இறங்கிப் போராடிய மார்ச் 8ஐ சர்வதேசப் பெண்கள் தினமாக அறிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பெண் அமைப்புகள் கலந்துகொண்டன. அன்று முதல் மார்ச் 8இல் சர்வதேச பெண்கள் தினம் கடைபிடிக்கப்படுகிறது. இருப்பினும் 1911ஆம் ஆண்டில் ஆஸ்திரியா, டென்மார்க், ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் மார்ச் 19ஐ பெண்கள் தினமாகக் கொண்டாடி பெண்களுக்கு சம உரிமை வழங்க மனித சங்கிலியும், பேரணியும் நடத்தினர்.

ரஷ்யாவில் பிப்ரவரி கடைசி ஞாயிறு அன்று பெண்கள் தினம் கொண்டாடப்பட்டு வந்தது. முதலாம் உலக யுத்தம் முடிந்தவுடன் அமைதியின் நடவடிக்கையாக ரஷ்யப் பெண் ஒருவர் உலகம் முழுவதும் மார்ச் 8 அன்றே சர்வதேச பெண்கள் தினத்தைக் கொண்டாடவேண்டும் எனப் பேரணிகளையும், மனித சங்கிலியையும் நடத்தி வந்தார்.

ஐ.நா. சபை, பெண்களுக்கு சம உரிமை வழங்குவதற்கு ஆதரவு தெரிவித்தது. பெண்களுக்கு சம உரிமை வழங்குவது என்பது மனித அடிப்படை உரிமை என்றது. அதற்காக 1945 ஆம் ஆண்டில் கையொப்பம் இட்டது. அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஐ சர்வதேச தினமாக கடைபிடிக்க வேண்டும் என தனது உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. 1946ஆம் ஆண்டு முதல் மார்ச் 8ஐ பெண்கள் தினமாகக் கடைபிடித்து உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

பல பெண்கள் அமைப்புகள், சர்வதேச பெண்கள் தினத்தில் கோலப் போட்டி, சமையல் போட்டி போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. இது பெண்கள் வீதியில் இறங்கி போராடிய மகத்தான தினத்தை நினைவு கூறும் தினமாகும். ஒவ்வொரு பெண்ணும் மார்ச் 8 ஐ மறக்க முடியாத தினமாகக் கருதவேண்டும். தங்கள் உரிமையை பெறுவதற்காக போராடக்கூடிய தினம். இன்றைக்கும் உலகம் முழுவதும் 1,000க்கும் மேற்பட்ட பெண்கள் இயக்கங்கள் தங்களின் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றன.

நன்றி: **சர்வதேச தினங்கள் எனும் நூலிலிருந்து...**

சிங்கங்களைப் பராமரிக்கும் முதல் பெண்மணி!

செங்கல்பட்டு மாவட்ட, வண்டலூரில் அமைந்துள்ளது. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா. இப்பூங்கா, 1855ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட இந்தியாவின் முதல் உயிரியல் பூங்கா ஆகும். சுமார், 602 ஏக்கர் பரப்பளவில் இப்பூங்கா அமையப்பட்டுள்ளது.

இப்பூங்காவில் சுமார் 33, ஆண்டுகளுக்கு முன்னர் பணியில் சேர்ந்தார் பு.தேவகி, 55 வயதைக்கடந்த இவர் 25 ஆண்டுகளாக சிங்கங்களைப் பராமரிக்கும் முதல் பெண் ஆவார். ஆரம்பத்தில் பறவைகள் மற்றும் ஒட்டகச்சிவிங்கிகளை பராமரித்து வந்த தேவகி, முதன்முதலில் சிங்கக்குட்டிகளால் ஈர்க்கப்பட்டு அதனைப் பராமரிக்க துவங்கினார். பின்னர் தனது அதித அன்பினால் சிங்கங்கள் இவர் மீது பாசத்தைக் காட்ட ஆரம்பத்துவிட்டது. அன்று முதல் இன்று வரை உண்மையான சிங்கபெண்ணாக வண்டலூர் உயிரியல் பூங்காவில் வலம்வரும் தேவகி, சிங்கத்திற்குத் தேவையான உணவு வழங்குதல் கால்நடை மருத்துவருக்கு உதவுவது மற்றும் அனைத்து பராமரிப்பு பணிகளுக்கும் உதவியாக இருந்து வருகிறார்.

புற்றுநோயின் எதிரி, நோயாளிகளின் கலங்கரை விளக்கம் டாக்டர் சாந்தா

அடையார் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் முன்னாள் தலைவர் மற்றும் செயல்தலைவரான டாக்டர் சாந்தா அவர்கள் இந்தியாவின் புகழ்பெற்ற அறிவியல் குடும்பத்தில் ஒருவராக 11.03.1927 அன்று சென்னையில் பிறந்தார். இவரது தாய்வழி பாட்டனாரும், தாய்வழி மாமனும் உலகின் மிகப் பெரிய அறிவியல் விருதான நோபல் பரிசு பெற்றவர்கள்.

டாக்டர் சாந்தா அவர்கள் 1949இல் மருத்துவப் படிப்பை (M.B.B.S.) முடித்தார். பின்பு 1952இல் D.G.O. எனப்படும் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவப் படிப்பையும் 1955இல் அதில் M.D., பட்டத்தையும் முடித்தார். 1955ஆம் வருடம் ஏப்ரல் மாதம் அப்போது வளர்ந்துவரும் இந்திய பெண்கள் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட புற்றுநோய் மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாய் பணியில் சேர்ந்தார். அதே சமயம் அவருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு மையத்தின் மூலம் அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரியும் வாய்ப்பும் கிடைத்தது. அதனை தவிர்த்து அவர் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் சேர்ந்தார். டாக்டர் சாந்தா தன்னுடைய 60 ஆண்டு பணியையும் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அந்த நோயைப்பற்றி படிப்பவர்களுக்கும், ஆராய்ச்சி செய்பவர்களுக்கும், அதை தடுப்பவர்களுக்கும் கட்டுப்படுத்துவர்களுக்கும் அர்ப்பணம் செய்தார்.

டாக்டர் சாந்தா அவர்கள், டாக்டர் கிருஷ்ணமூர்த்தியுடன் சேர்ந்து, 12 படுக்கைகளை கொண்ட அடையார் புற்றுநோய் மருத்துவமனையை உலகளவில் ஒரு மிகப் பெரிய எல்லா வசதிகளும் கொண்ட ஒரு புற்றுநோய் மருத்துவமனையாக மாற்றியதில் பெரும்பங்கு வகித்தார். அந்த மருத்துவமனையின் பலவித சிறப்புகளுக்கும், செயல்பாட்டிற்கும் அவர் முக்கிய காரணமாக திகழ்ந்தார். டாக்டர் சாந்தா அவர்கள் உலக சுகாதார

நிறுவனத்தின் (WHO) புற்றுநோய் ஆலோசகராக மார்ச் 2005 வரை பணியாற்றியுள்ளார். அவர் மாநில புற்றுநோய் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தார். இந்திய–அமெரிக்க புற்றுநோய் கூட்டுக்குழுவின் இந்திய உறுப்பினராக பணியாற்றியுள்ளார். இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் (ICMR) பல குழுக்களில் அங்கம் வகித்துள்ளார். அவர் அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு (syndicate) உறுப்பினராக பணியாற்றியுள்ளார். இவர் இந்திய புற்றுநோய் கழகத்தின் தலைவராக

1988 முதல் 1990 வரை, ஆசிய மற்றும் பசுபிக் புற்றுநோய் கழகங்களின் தலைவராக (1987–1999) ஆசியா மற்றும் பசுபிக் மாநாட்டின் தலைவராக பெரும் பங்காற்றியுள்ளார். இவர் உலகளவில் பல அறிவியல் மாநாட்டில் பங்கு பெற்றுள்ளார். புற்றுநோய் சம்மந்தப்பட்ட விருதுகளை தவிர, இவர் பல உலகளவில் மற்றும் இந்திய அளவில் பல விருதுகளை பெற்றுள்ளார்.

இவர் உலகளவில் பல அறிவியல் மாநாட்டில் பங்குபெற்று சுமார் 95க்கும் மேற்பட்ட புற்றுநோய் பற்றிய அறிக்கைகளை பதிவு செய்துள்ளார். அதைத் தவிர புற்றுநோய் பற்றிய பல அரிய கருத்துக்களை பல மாநாடுகளில் பேசியுள்ளார்.

அவர் பெற்ற விருதுகள்

1986 – பத்மஸ்ரீ

1997 – I A R C விருது

1998 – Dr. வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தின் D.Sc பட்டம்

2002 – Tamil Nadu Dr. MGR மருத்துவ பல்கலைக் கழகத்தின் D.Sc பட்டம்

2002 – Naszli-Gad-El Mawla விருது

2005 – ரமோன் மகசேசே விருது

2006 – பத்ம பூஷன் விருது

2013 – தமிழக அரசின் அவ்வையார் விருது.

2013 – Dr. N.T.R. பல்கலைக் கழகத்தின் D.Sc பட்டம்

தொலைக்காட்சியில் செய்தி முடியும்போது வானிலை அறிவிப்பு என்கிற ஒரு முன் அறிவிப்பை தினமும் நாம் கேட்கிறோம். இன்றைக்கு மழை பெய்யுமா ? என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. வெய்யிலின் வெப்பம் ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரில் எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. இது போன்ற முன் அறிவிப்பை 48 மணி நேரத்திற்கு முன்பே தெரிந்துகொள்ளும் வாய்ப்பு நமக்கு இருக்கிறது.

சில நூற்றாண்டிற்கு முன்புவரை யூகத்தின் அடிப்படையில்தான் வானிலை பற்றிய தகவல்கள் சொல்லப்பட்டு வந்தன. ஆனால், அவை அனைத்தும் உண்மையானதாக இல்லை. 17ஆம் நூற்றாண்டிற்கு பின்னர்தான் வெப்பமானி, பாரமானி போன்ற கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் பின்னர்தான் வானிலை பற்றிய தகவல்கள் அறிவதில் ஒரு புதிய வளர்ச்சி ஏற்பட்டது.

சூரிய வெப்பத்தின் அளவை செல்சியஸில் குறிப்பிடத் துவங்கினர். வெயிலின் உஷ்ணத்தைக் கணக்கிட வெப்பமானி உதவியது. காற்றின் வேகத்தைக் கண்டறிய காற்றுமானியும், காற்றில் உள்ள ஈரப்பதத்தை கண்டுபிடிக்க ஈரப்பதமானியும், பெய்யும் மழையின் அளவை கண்டறிய மழைமானியும் பயன்படுத்தப்படுகிறது. இக்கருவிகளின் மூலம் நமக்குத் தேவையான புள்ளி விவரங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

வானிலை ஆய்வு மையங்கள் உலகம் முழுவதும் செயல்படுகின்றன. துரவப் பிரதேசங்களிலும் தானியங்கி மையங்கள் செய்லபடுகின்றன. இந்த ஆய்வு மையங்கள் வளிமண்டலத்தை ஆய்வு செய்து, காலநிலை, வாயு மண்டலத்தின் நிலை, வளிமண்டல அழுத்தம், காற்றின் வேகம், காற்றின் ஈரப்பதம், வெப்பநிலை போன்றவற்றை சேகரித்து கணினி மூலம் புள்ளி விபரங்களை வெளியிடுகின்றன.

வானிலை தினம்

மார்ச் 23 அன்று உலக வானிலை தினம் கொண்டாடப்படுகிறது. இத்தினம் 1950ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகின் தட்பவெப்பநிலை 1860க்கு பின்னர் 0.6 டிகிரி செல்சியஸ் உயர்ந்ததால், கடலின் நீர்மட்டம் 10 முதல் 20 செ.மீ. உயர்ந்துள்ளது. மேலும், சுற்றுச்சூழல் பாதிப்பாலும் பூமியின் வெப்பநிலை கூடிக் கொண்டே செல்கிறது. இதனால் வானிலையைப் பாதுகாப்பதும், வரும் தலைமுறைக்கு சாதகமாக அமைத்துக் கொடுப்பதும் மனிதர்களாகிய நமது கையில்தான் உள்ளது. வானிலையை மனிதனால் மாற்றி அமைத்துவிட முடியாது. ஆகவே, இருப்பதைப் பாதுகாப்பது, மனித குலத்தின் கடமையாகும். இல்லையேல் மனித குலம் பல பாதிப்புக்களை சந்திக்க நேரிடும்.

நன்றி: **சர்வதேச தினங்கள் எனும் நூலிலிருந்து...**

இந்தியாவின் முதல் பெண் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி!

இந்தியாவிலேயே 'பெண்களில் முதல் மருத்துவப் பட்டதாரி' என்ற சிறப்பைப் பெற்றவரும், பெண் குலத்திற்கு முன்னோடியாகவும் திகழ்ந்தவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி.

புதுக்கோட்டையில் 1886ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30ஆம் நாள் முத்துலட்சுமி பிறந்தார். தாயாரின் பெயர் சந்திரம்மா, தந்தையாரின் பெயர் நாராயணசாமி.

முத்துலட்சுமியின் தந்தையார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் முத்துலட்சுமியைச் சேர்த்தார். பள்ளி ஆசிரியரிடம் 'பால் கணக்கு சலவைக் கணக்கு' எழுதும் அளவுக்கு கற்றுக்கொடுத்தால் போதும் எனக் கூறினார்.

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படிப்பைத் தொடங்கிய முத்துலட்சுமி தனது சொந்த முயற்சியால் ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். ஆறாம் வகுப்பிற்குப் பிறகு முத்துலட்சுமியை படிக்க வைக்க அவரது பெற்றோர்கள் விரும்பவில்லை.

முத்துலட்சுமியின் ஆசிரியர் அவரது பெற்றோர்களை சந்தித்து முத்துலட்சுமியின் கல்விச் செலவை தாமே ஏற்றுக் கொள்வதாகவும் கூறினார். பள்ளியில் படித்த நூறு பேர்களில் முத்துலட்சுமி மட்டுமே பெண் என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளியில் படித்தவர்களில் முத்துலட்சுமியே முதல் மாணவியாகத் திகழ்ந்தார்.

பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து கல்லூரியில் படிக்க வேண்டும் என மிகவும் ஆர்வம் கொண்டார் முத்துலட்சுமி. புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் சேருவதற்கு முயற்சி செய்தபோது ஆண்கள் படிக்கும் கல்லூரியில் பெண்களை எப்படி சேர்ப்பது என கல்லூரி நிருவாகம் தயங்கியது. புதுக்கோட்டை மன்னரின் உதவியால் முத்துலட்சுமிக்கு கல்லூரியில் இடம் கிடைத்தது.

வகுப்பில் மற்ற மாணவர்கள் முத்துலட்சுமியை பார்க்கக்கூடாது என்பதற்காக இடையில் திரை போடப்பட்டது. படிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்ட முத்துலட்சுமி பல்கலைக்கழகத்தில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றார்.

கல்லூரிப் படிப்புக்குப் பின் மருத்துவம் படிக்க வேண்டும் என முத்துலட்சுமி விரும்பினார். முத்துலட்சுமியின் தாயாரின் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது மருத்துவம் படித்திருந்தால் தாயாருக்கு மருத்துவம் பார்க்கலாமே எனத் தோன்றியது. இதுவே, மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது

சென்னை மருத்துவக் கல்லூரியில் 1907ஆம் ஆண்டு முத்துலட்சுமி சேர்ந்தார். மருத்துவக் கல்லூரியில் ஒரே மாணவியாக முத்துலட்சுமி படித்தார்.

மருத்துவக் கல்லூரியில் பணிபுரிந்த டாக்டர் நஞ்சுண்டராவ் முத்துலட்சுமியின் அறிவாற்றலைக் கண்டு வியந்தார். அவருக்கு மிகுந்த ஊக்கமும், உற்சாகமும் அளித்தார். டாக்டர் நஞ்சுண்டராவ் மூலம் முத்துலட்சுமிக்கு நாட்டுப்பற்று உணர்வு மேலோங்கியது.

டாக்டர் நஞ்சுண்டராவ் வீட்டிற்கு முத்துலட்சுமி சென்றிருந்த போது அங்கு பாரதியார் வந்திருந்தார். முத்துலட்சுமியின் தேசப்பற்றையும் அறிவாற்றலையும் கண்ட பாரதியார் தனது 'இந்தியா' பத்திரிகைக்கு கட்டுரைகளை எழுதித் தருமாறு கேட்டார். மிகுந்த மகிழ்ச்சியுடன் முத்துலட்சுமி ஒப்புக்கொண்டார்.

இந்தியாவிலேயே பெண்களில் முதல் மருத்துவப் பட்டதாரி என்ற பெருமையைப் பெற்ற முத்துலட்சுமி 1912ஆம் ஆண்டு டாக்டர் பட்டம் பெற்றார்.

புதுக்கோட்டையில் ஏழை, எளிய மக்களுக்கு இலவசமாக மருத்துவம் செய்தார். பின்பு சென்னை வந்த முத்துலட்சுமி 1917ஆம் ஆண்டு தனியாக மருத்துவமனை ஒன்றைத் தொடங்கினார்.

விசாகப்பட்டினத்தில் மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருந்த டாக்டர் சுந்தர ரெட்டி முத்துலட்சுமியின் தந்தையாருக்கு ஒரு கடிதம் எழுதினார். தனது படிப்பு, வேலை போன்றவற்றைக் குறிப்பிட்டு, டாக்டர் முத்துலட்சுமியை மணக்க விரும்புவதாகவும் அதற்கு சம்மதம் தெரிவிக்க வேண்டுமாறும் கோரியிருந்தார்.

இக்கடிதத்தைப் படித்த முத்துலட்சுமியின் தந்தை நாராயணசாமியும், தாயார் சந்திரம்மாவும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். முத்துலட்சுமியை டாக்டர் சுந்தர ரெட்டிக்கே திருமணம் செய்து வைப்பது என முடிவு செய்தனர்.

டாக்டர் சுந்தர ரெட்டியும் முத்துலட்சுமியும் சந்தித்து தங்களது எண்ணங்களை மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள். தேசப்பணியையும் சமூகப் பணியையும் தொடர்ந்து செய்ய அனுமதிக்க வேண்டும். தன்னுடைய மருத்துவ சேவைக்கு கணவர் ஒத்துழைப்புத் தரவேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார் முத்துலட்சுமி.

டாக்டர் சுந்தர ரெட்டியும் முத்துலட்சுமியின் எண்ணங்களை செயல்படுத்த தனது ஒத்துழைப்பும் ஆதரவும் உண்டு எனக் கூறினார்.

முத்துலட்சுமி – டாக்டர் சுந்தர ரெட்டியின் திருமணம் 1914ஆம் ஆண்டு மிக எளிமையான முறையில் நடைபெற்றது. இவர்களுக்கு ராம்மோகன், கிருஷ்ணமூர்த்தி என இரண்டு குழந்தைகள் பிறந்தன.

டாக்டர் முத்துலட்சுமியின் தங்கைக்கு புற்றுநோய் ஏற்பட்டது. மிகுந்த அதிர்ச்சி அடைந்தார் முத்துலட்சுமி, தங்கையின் அருகில் இருந்தபடியே மிகவும் அன்புடனும் அக்கறையுடனும் பார்த்துக்கொண்டார். ஆனால், முத்துலட்சுமியின் அன்புத் தங்கை நோயின் கொடுமையால் இறந்து விட்டார். இதற்குப் பின்பு புற்றுநோயால் கஷ்டப்படும் நோயாளிகளுக்கு மருத்துவம் செய்வதை தனது இலட்சியமாகக் கொண்டார்.

சென்னை அடையாறில் புற்றுநோய் ஆராய்ச்சி மருத்துவமனையை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார். லண்டனுக்குச் சென்று மேற்படிப்பைத் தொடர்ந்தார். குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களைக் குறித்து லண்டனில் ஆராய்ச்சி செய்தார்.

சென்னை அடையாறில் இந்தியப் பெண்கள் கழகத்தை 1917ஆம் ஆண்டு ஏற்படுத்தினார். ‘ஸ்திரீ தர்மம்’ என்ற இதழின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். பெண் கல்வி, பால்ய விவாகம் போன்றவை பற்றி கட்டுரைகளை எழுதினார்.

சென்னை மாநில ஆளுநர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியை மேலவைத் துணைத் தலைவராக 1927ஆம் ஆண்டு தேர்ந்தெடுத்தார்.

ஏழைகளுக்கு இலவசக்கல்வி, கைம்பெண்களுக்குக் கல்வியில் சலுகை வழங்க முத்துலட்சுமி ரெட்டி நடவடிக்கை மேற்கொண்டார்.

1927ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவையில் தேவதாசி ஒழிப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். பெண்களுக்கு சொத்துரிமையும் சம உரிமையும் பெற சட்டம் கொண்டுவர அயராது பாடுபட்டார்.

குற்றம் புரிந்த சிறுவர்கள் திருந்தி வாழும் வகையில் ‘**குழந்தைகள் பாதுகாப்பு இல்லம்**’ ஒன்றைத் தொடங்கினார். பெண்களுக்காக ‘திக்கற்ற இளம் பெண்கள் இல்லம்’ ஒன்றினையும் தொடங்கினார். தொழிற்பள்ளி, தொடக்கப் பள்ளி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி போன்றவற்றை ஆரம்பித்தார்,

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஆராய்ச்சி நிலையத்தையும் மருத்துவமனையும் தொடங்கினார். இந்திய ஜனாதிபதியாக இருந்த இராஜேந்திர பிரசாத் அவர்கள் 1951ஆம் ஆண்டு புற்று நோய் ஒழிப்பு நாளைத் தொடங்கி வைத்தார். அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்திற்கு 1952ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. சமுதாய நலனுக்காகவும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் தனது இறுதி மூச்சு வரை உழைத்தார் டாக்டர் முத்துலட்சுமி.

மத்திய அரசு டாக்டர் முத்துலட்சுமிக்கு ‘பத்மபூஷன்’ அளித்துக் கௌரவித்தது.

ஆங்கிலேய ஆட்சியில் இந்திய சட்டசபையில் பதவி வகித்த முதல் பெண்மணி என்ற சிறப்பினைப் பெற்றார். உலகிலேயே சட்டசபைத் துணைத் தலைவர் பதவி வகித்த முதல் பெண்மணி என்ற சிறப்பினையும் பெற்றவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி.

இந்திய அரசாங்கத்தின் உதவியால் வெளிநாடு சென்று மருத்துவத் துறையில் உயர்கல்வி பெற்ற முதல் பெண்மணியாகத் திகழ்ந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 1968ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

நன்றி: **பெண்கள் நாட்டின் கண்கள் எனும் நூலிலிருந்து...**

‘செவ்வாய் பெண்மணி’ ஸ்வாதி மோகன்

ஸ்வாதி மோகன் ஓர் இந்திய–அமெரிக்க வான்வெளிப் பொறியியலாளர் ஆவார். இவர் அமெரிக்க நாசா விண்வெளி நிருவாகத்தின் செவ்வாய் 2020 திட்ட திட்டத்தின் வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டு செயல்பாட்டுத் தலைவர் ஆவார்

ஸ்வாதி இந்தியாவில் கருநாடக மாநிலம், பெங்களூரில் பிறந்து, ஓராண்டிற்குள் அமெரிக்காவில் பெற்றோருடன் குடிபெயர்ந்தார். மருத்துவராக வேண்டும் என்ற நோக்கில் படித்த ஸ்வாதி, விண்வெளி ஆய்வுத்துறையில் ஏற்பட்ட ஆர்வத்தினால், தனது 16ஆவது அகவையில் இயற்பியல் படிக்க ஆரம்பித்தார். கோர்னெல் பல்கலைக்கழகத்தில் இயந்திர மற்றும் வான்வெளிப் பொறியியல் துறையில் படித்துப் பட்டம் பெற்று, மாசாச்சூசெட்சு தொழில்நுட்பக் கழகத்தில் வானூர்தி அறிவியலில் முதுகலை, மற்றும் முனைவர் பட்டம் பெற்றார்

ஸ்வாதி மோகன் கலிபோர்னியாவின் பசடீனாவில் உள்ள நாசாவின் ஜெட் புராபல்சன் ஆய்வகத்தில் (ஜேபிஎல்) செவ்வாய் 2020 திட்டப் பணிக்கான வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாடுகள் செயல்பாட்டுத் தலைவராகப் பணியாற்றுகிறார். இத்திட்டத்தில் ஸ்வாதி 2013ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டார். அவரது பணியில், தரையூர்தியைச் (rover) சுமக்கும் விண்கலம் செவ்வாய்க் கோளிற்கான பயணத்தின்போதும், கோளின் மேற்பரப்பில் தரையிறங்கும் போதும் சரியான திசையில் நிலைப்படுத்தப்பட்டிருப்பதை உறுதிசெய்வதற்கு பொறுப்பேற்றார். 2021 பிப்ரவரி 18 அன்று பெர்சீவியரன்சு தரையூர்தி செவ்வாயில் தரையிறங்கியபோது, திட்டக் கட்டுப்பாட்டு அறையில் இருந்து இறங்கும் நிகழ்வுகளை அவர் உடனுக்குடன் விவரித்தார். “தரைத்தொடுகை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது” என்று அவர் அறிவித்தார்.

முன்னதாக, ஸ்வாதி சனி கோளிற்கான காசினி திட்டத்திலும், நிலாவின் ஈர்ப்புப் புலத்தை வரைபடமாக்கிய கிரெயில் ஆய்வகத்திலும் பணியாற்றியிருந்தார்.

ராக்கெட் பெண்மணி ந. வளர்மதி

ந. வளர்மதி, தமிழ்நாட்டில் உள்ள அரியலூர் மாவட்டத்தில் பிறந்தவர், நடராஜன் – இராமசீதா தம்பதியருக்கு மூன்று பிள்ளைகளில் மூத்தவராக பிறந்தவர். அரியலூர் நிர்மலா மேல்நிலைப் பள்ளியில் தமிழ்வழி கல்வியில் படித்தவர். கல்லூரிப் படிப்பை அரியலூர் க்ளிக் கல்லூரியிலும் தொடர்ந்து அரசின் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூரில் B.E., (E.E.E) சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் முதல் நிலையில் M.E., (E.E.E) தேர்ச்சிப் பெற்றார்.

பின்னர், 1984ஆம் ஆண்டில் பெங்களூரில் உள்ள, ISRO (விண்வெளி மையத்தில்) இணைந்தார், DRDO மற்றும் ISRO இரண்டில் இருந்து வாய்ப்புகள் வந்த போதிலும் ISROவை தேர்தெடுத்தார். தனது திறமைகளை கொண்டு 2012ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட Radar Imaging Satellite –1இன் முதல் பெண் திட்ட இயக்குனராக படிப்படியாக உயர்ந்தார். தமிழகம் போற்றும் சாதனைப் பெண் ஆனார்.

விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா

ஹரியானா மாநிலம் கர்னல் எனும் சிறிய கிராமத்தில் பிறந்த கல்பனா சாவ்லாவின் குடும்பம் இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது இங்கு வந்து குடியேறிய நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த குடும்பமாகும். இவர் பனார்சிதாஸ் – சனியோகிதாதேவி தம்பதியருக்கு 1962ஆம் ஆண்டு மகளாக பிறந்தார்.

கல்பனாவும் சிறுவயதிலேயே உன்னதப் பெண்மணியாக எதிர்காலத்தில் உருவாவதற்குரிய அத்தனை அம்சங்களையும் ஒருங்கே பெற்றவராக காணப்பட்டார்.

கல்பனா டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் மூதறிவியல் பட்டப்படிப்பை முடித்துவிட்டு டாக்டர் பட்ட ஆய்வுக்காக கொலராடோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1988இல் ஆய்வை முடித்தார்.

நாஸா (NASA) விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் தனது ஆராய்ச்சிப் பணியை முடித்துக்கொண்ட கல்பனா ஃபவர்டு லிஃட்கம் யூடஷேனல் ஃடப்ளு விட்டைன் மிக்ஸ் என்ற கடுமையான முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதனையடுத்து கலிபோர்னியாவில் உள்ள ஒவர் ‘செட்மெத்தெடில் 1993இல் துணைத் தலைவர் பொறுப்பேற்றார்.

1996ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜான்சன் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் 15ஆவது விண்வெளி வீரர் குழுவில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். விண்வெளி ஆய்வில் கைதேர்ந்த வல்லுனர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் யாவும் இந்திய கிராமத்துப் பெண்மணியான கல்பனா சாவ்லாவிற்கும் அளிக்கப்பட்டது. ஆனால் இக்கடுமையான பயிற்சிகள் எதுவும், நாஸாவிற்குப் பறந்து சென்ற கல்பனாவிற்கு ஒரு பொருட்டாகப் படவில்லை.

1989–1994இல் சான் பிரான்சிஸ்கோவில் ‘பே ஏரியா’வில் வசிக்கும்போது கல்பனா சாவ்லா விமானத்தை இயக்குவதற்குரிய உரிமம் பெற்றார். அதன் மூலம் கையாள கடினமான விமானங்களைக் கூட லாவகமாக இயக்கும் தனி திறமைகளைப் பெற்றார். தான் பெற்ற திறமைகளை தன்னோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், தன்னுடைய சகமானவர்களையும் அழைத்துச் சென்று விமானங்களைச் சுற்றிக் காண்பித்து, அவர்களும் தன் போன்ற உயர்நிலையை எட்டிப் பிடிக்க வேண்டுமென்ற பரந்த நோக்குடன் செயல்பட்டார்.

இவர் கே.ஆர்.டி., டாடா, டென்சி, நார்கே போண்டோர்களை முன்னுதாரணமாய் கொண்டு இரண்டுமுறை விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டார். அதில் தோல்வியடைந்தாலும் அவர் தன் முயற்சியை விடவில்லை.

ஏற்கெனவே, கூச்ச சுபாவம் கொண்ட மென்மையான கல்பனா சாவ்லா, தான் பெற்ற கடுமையான பயிற்சியின் மூலம் தன் குணாதிசியங்களை துணிச்சல் மிக்க பெண்ணாகவும், எல்லோரிடமும் சஜகமாக பழகும் குணம் கொண்டவராகவும் மாறினார். கர்னால் பள்ளியில் தொடங்கி, செவ்வாய் கிரகம் வரையிலும் லட்சியத்துடன் செயல்பட்ட கல்பனாவை முதன் முதலில் “ரோபோடிக் ஆரிம்” ஆபரேட்டராக நியமிக்கப்பட்டார்.

இந்திய விமானப் படை அதிகாரியாக ராகேஷ் சர்மாவுக்கு அடுத்தபடியாக விண்வெளிப் பயணம் மேற்கொண்ட ஒரே இந்திய மங்கை கல்பனா சாவ்லா தான்.

கொலம்பியாவின் விண்வெளி ஓடத்தில், தன்னுடன் ஆறு வீரர்களுடன் விண்வெளி பயணத்திற்குத் தயாரானார். ஃப்ளோரிடாவில் இருக்கும் கென்னடிஸ் பேஸ் சென்டர், பிப்ரவரி 1ஆம் தேதி காலை 9.53 மணி இந்தியாவில் மணி 7ஐ கடந்திருந்தது. கொலம்பியா எனும் கொலைகார ஓடம் விண்ணில் வெடித்துச் சிதறியதாக தொலைக்காட்சி அறிவித்தது. அதில் கல்பனாவும் அவருடன் விண்ணில் பயணம் செய்த ஆறு வீரர்களும் பலியாயினர்.

இந்தியத் திருநாட்டிற்கும், இந்தியப் பெண்மணிகளுக்கும் புகழ் ஈட்டிய கல்பனா சாவ்லாவின் இழப்பு இந்தியாவையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இந்தியாவின் வீரம், நாட்டுப்பற்று, சமூகநலன் என்று பல துறைகளில் பல பெண்மணிகள் தொண்டாற்றிய போதும், அறிவியல் துறையில் வேறு எவராலும் முடியாத சாதனை செய்து, சாதனைப் பட்டியலில் இடம் பெற்ற ஒரே பெண்மணி என்ற பெருமை கல்பனா சாவ்லாவையே சாரும்.

விண்வெளி வீராங்கனையின் உடல் அழிந்தாலும், அவரது நினைவுகள் என்றும் இவ்வுலகில் நிலைத்து நிற்கும்.

சரித்திரம் படைத்த சாதனைப் பெண்கள்
எனும் நூலிலிருந்து...

வெள்ளையனுக்கு அஞ்சாத அஞ்சலையம்மாள்

கணவர் : திரு. முருகப்படையாட்சி
தாயார் : அம்மாக்கண்ணு அம்மாள்
தோற்றம் : 1890
முகவரி : 38, காந்தி பார்க் வீதி, கடலூர்–3

கல்வியில் குறைந்து – அறிவிலும் துணிவிலும், அனுபவத்திலும் முதிர்ந்த இந்த அஞ்சலையம்மாள், தென்னார்க்காடு மாவட்டத்தின் வேலு நாச்சியார்வார். 1921இல் இந்திய சுதந்திரப் போர் அரங்கில் இறங்கினார். 1927இல் நீலன் சிலையகற்றும் போரில் ஒரு ஆண்டு தண்டனை – சென்னையில் 1931இல் உப்புக் காய்ச்சும் போராட்டத்தில் சிறைத்தண்டனை – கடலூரில்.

1933இல் மறியல் போரில் மூன்று மாத தண்டனை – கடலூரில். 1940இல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் முதலில் 6 மாதம், 1941இல் மீண்டும் சிறை; 1943இல் 8 மாதம் 2 வாரம் தண்டனையும் அளிக்கப்பட்டது. ஆக மொத்தம் ஏழு போராட்டங்களில் பங்கேற்று நான்கு ஆண்டு ஐந்தரை மாதங்கள் சிறைத்தண்டனை பெற்று கடலூர், திருச்சி, வேலூர், பெல்லாரி சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தார்.

தமிழ்நாட்டில் முதன்முதலில் சத்தியாக்கிரகத்தில் சிறை புகுந்த பெண்கள் எனக் கூறும் பெருமைக்குரியவர்களில் ஒருவர் இந்த அஞ்சலையம்மாள்.

திருமதி அஞ்சலையம்மாள் அவர்கள் ஜில்லா போர்டு உறுப்பினராகவும், சென்னை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் கடலூரில் அஞ்சலையம்மாளைத் தெரியாத தேசபக்தர் இருக்கமாட்டார். குள்ளமான, ஆனால் பருமனான உருவம் நிறைய மஞ்சள் பூசி, பெரிய குங்குமப் பொட்டு வைத்து மங்களக் களைபொலியும் முகம். மாறாத புன்முறுவல். தடித்த கதர்ச்சேலை. நிமிர்ந்த நன்னடை; நேர் கொண்ட பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறியின் மணம் வீசும் பேச்சு இவரைப் பார்க்க கிராமப் பெண்கள் கூட்டம், படை படையாக வருவார்கள். மெல்லிய குரலில், கிராமிய நடையில் இனிமையாகப் பேசுவார். இவர் பேச்சில் பெண்கள் வசீகரிக்கப்பட்டு தேசபக்தி கொண்டவர்களாகி விடுவர். எந்த இடத்திலும், எந்த நிலையிலும் எந்த அதிகாரி முன்னரும் கலங்காது நின்று போராடும் வீராங்கனையாவார். இவருடைய கணவர் முருகப்படையாட்சியும் தீவிர தேசபக்தத் தியாகி. எளிய கிராம விவசாயி. அஞ்சாமையும், கடமையும் இயல்பாகக் கொண்டவர். இவர்கள் மகளுக்கு ''லீலாவதி'' என்ற இனிய பெயரைக் காந்தி மகான் வைத்தார். இந்தப் பெண் வார்தா ஆசிரமத்தில் இருந்தவர்.

முருகப்படையாட்சி 1927 வரை குடிப்பழக்கம் உள்ளவராக இருந்தார், சூதாட்டத்திலும் ஈடுபடுவார். இவர் 1927இல் காந்திஜி கெடில நதிக்கரையில் பேசியதைக் கேட்டு அன்றே குடியையும், சூதையும் இனித் தொடுவதில்லை என்று பிரமாணம் செய்து புது மனிதராக மாறி சத்தியாக்கிரகியானார்.

அஞ்சலையம்மாள் குடும்பம் முழுவதுமே தேச விடுதலையில் ஈடுபட்டுப் பாடுபட்ட தியாகக் குடும்பம் அந்த அம்மை கருவுற்றிருக்கும்போதே சிறை புகுந்தார். பேறு காலத்திற்கு விடுதலை தரவும் வீடுவந்து ஆண் குழந்தை பெற்று அவனுக்கு ஜெயவீரன் என்ற பெயருமிட்டு, மீண்டும் கைக்குழந்தையுடன் சிறைக்குள் வந்தார்.

லீலாவதி ஒன்பது வயதுப் பெண்ணாகத் தாயுடன் நீல்சிலை சத்யாக்கிரகத்தில் போருக்கு இறங்கிவிட்டாள். இந்தச் சிறுமிக்கு 4 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது.

கள்ளுக்கடை இருக்குமிடமெல்லாம் அச்சிட்ட, குடியை கைவிடத் தூண்டும் துண்டறிக்கை வழங்கிக்கொண்டே அஞ்சலையம்மாள் மறியல் செய்வார்.

சென்னையில் தடைவிதிக்கப்பட்ட காங்கிரஸ் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கி ஒரு பெண்கள் படையுடன் அஞ்சலையம்மாள் கைதானார். இந்த லீலாவதியின் கணவர் ஜமதக்னி ஒரு தியாகி, மிகச் சிறந்த அறிவாளி, இந்திப்பண்டிதர், தமிழ்நாட்டின் விடுதலைச் சரித்திரத்தில் இந்தக் குடும்பம் தனது பெரும்பணிகளால் ஒரு முக்கிய இடம் பெறுவதாகும்.

திருமதி அஞ்சலையம்மாள் அவர்கள் 20.02.1961இல் அமரரானார்.

நன்றி: **அக்டோபர் 1997 தமிழரசு இதழிலிருந்து...**

தோற்றம் : 01.12.1901

பள்ளிக்குச் செல்லாமல் நாவல் ஆசிரியர் ஆன வை.மு.கோதைநாயகி அம்மாள்

ஒரு நாள் கூட பள்ளிக்குப் போகாமல் 115 நாவல்களை எழுதிய அசாத்திய பெண்மணி. கிட்டத்தட்ட முப்பத்தைந்து ஆண்டுகள் தனி ஆளாய் ஜகன்மோகினி எனும் இதழை நடத்தியவர். எழுத்தாளர் பத்திரிகையாளர் சுதந்திர போராட்ட வீரர், சமூகசேவகி இசைக் கலைஞர் எனப் பல பரிமாணங்களில் தன்னை நிறுவிக்கொண்டவர்.

சென்னை திருவல்லிக்கேணியில் பிறந்தவர். தந்தை நீர்வளூர் என்.எஸ்.வெங்கடாச்சாரியார் தாயார் பட்டம்மாள். 1907ஆம் ஆண்டு கோதைக்கு ஐந்தரை வயது ஆனபோது அதே திருவல்லிக்கேணியில் ஏழு வயதான வை.மு.பார்த்தசாரதியுடன் திருமணம் நடைபெற்றது. வை.மு என்பது பார்த்தசாரதி அவர்களது குடும்பப் பெயர். இதில் வை என்பது வைத்தமாநிதி எனும் அவர்களது குலதெய்வமான திருகோளூர் பெருமானின் பெயர். மு என்பது முடும்பை. அவர்கள் பூர்வீக கிராமத்தின் பெயர். பரம்பரையாக இந்த பட்டப் பெயர். நாள் தொட்டு வை.மு.கோதைநாயகியனார். மாமனார் வீட்டில் இருந்தவர்கள் அனைவருமே தமிழையும் சமஸ்கிருதத்தையும் நன்கு கற்றுக் கரை கண்டவர்கள். ஆழ்வார்கள் பாசுரங்களை மனப்பாடமாக ஒப்பிப்பவர்கள் மூத்த மாமனார் திருக்குறள் பரிமேலழகர் உரைக்கும் நன்னூலுக்கும் உரை எழுதியவர் அதனாலேயே பள்ளிக்குக் கூட சென்றிராத வை.மு.வுக்கு வீட்டில் ஓரளவு கல்வியறிவு பெரும் வாய்ப்புக் கிட்டியது.

சிறுவயது முதலே கதை சொல்வதில், ஆர்வம் கொண்ட கோதை வீட்டு வேலை போக இதர நேரங்களில் வீட்டிலுள்ள இதர சிறுவர், சிறுமியர்களுக்கு கதை சொல்வதில் ஈடுபட்டார். கோதை சொன்ன கதைகள் மெல்ல பெரியவர்களின் காதுக்கும் விழ அவர்களும் குறிப்பாக கணவரும் அவரை மிகவும் உற்சாகப்படுத்தினார். இதன் காரணமாக கோதைக்கு கணவருடன் சேர்ந்து நாடகத்துக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. வை.மு.வுக்குள் நாடகங்கள் புதிய உலகைத் திறந்துவிட்டன. தானும் ஒரு நாடகம் எழுதிப்பார்க்க ஆவலுற்றார் கல்வியறிவில்லாத வை.மு.வுக்கு எழுதத் தெரியவில்லை. இச்சமயத்தில் அவர் சொல்ல தான் எழுதித் தருவதாக வந்தார் பட்டம்பாள் எனும் தோழி.

அடுத்த சில நாட்களில் மோகனா எனும் அவரது முதல் நாடகம் எழுத்தில் உருவானது. அப்போது அவருக்கு வயது 24. அவரது கணவர் அந்த நாடக நூற் பிரதிகளை அப்போது புகழ்பெற்ற நாடகாசிரியரான பம்மல் சம்மந்த முதலியார் மற்றும் துப்பறியும் கதைகளை எழுதிவந்த வடுவூர் துரைசாமி அய்யங்கார் ஆகியோரிடம் காண்பிக்க அவர்களும் வை.முவுக்குப் பாராட்டும் உற்சாகமும் தெரிவித்தனர் அடுத்ததாக அவர் எழுதியது வைதேகி எனும் நாவல். அதனை வெளியிட எந்த அச்சகமும் முன் வராத காரணத்தால் கணவர் மூலம் அப்போது பாதியில் நின்ற ஜகன்மோகினி எனும் இதழை வாங்கி அதனை மாத இதழாக அச்சிட்டு அதிலேயே தன் முதல் நாவலைத் தொடர் கதையாக வெளியிட்டார். அந்த ஜகன்மோகினி இதழ் அன்று துவங்கி தொடர்ந்து 35 ஆண்டுகள் வெளியாகி சாதனை படைத்தது.

தமிழ்ப் பண்டிதரான தன் சிறிய தகப்பனார் திருத்தேரி ராகவாச்சாரியிடம் திருக்குறள், நாலடியார், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி மற்றும் கம்பராமாயணம் ஆகியவற்றைக் கற்றார். பிற்பாடு அவர் எழுதிய நாவல்களுக்கு இது பெரிதும் உதவியது. ஒருமுறை காந்தியை பார்க்கும் வாய்ப்பு கிட்ட அதுமுதல் தன்னை விடுதலைப் போராட்டத்திலும் ஈடுபடுத்திக்கொண்டார். அரசுக்கெதிரான போராட்டம் காரணமாக ஆறுமாதம் வேலூரில் சிறைத் தண்டனையும் அனுபவித்தார்.

சடங்கு சம்பிராதாயங்கள் நிறைந்த பிராமண வைதீகச் சூழலில் வாழ நேர்ந்தாலும் வை.மு.கோ தன் கதைகளில் அவையனைத்தையும் உடைத்தெறிந்தார். அவர் எழுதிய 115 நாவல்களில் பெரும்பாலானவை துப்பறியும் வகையை சார்ந்தவை என்றாலும் அவற்றிலும் பெண்ணடிமை, பெண்கல்வி, வரதட்சணை ஒழிப்பு. விதவை மறுமணம், தேவதாசி ஒழிப்பு போன்ற நல்ல பல கருத்துக்களைச் சொல்லியுள்ளார். அவரது படைப்புகள் இலக்கிய தகுதியற்றவை. ஆனாலும் விடுதலைக்கு முன்பான இந்தியாவின் அறிவு நிலை எட்டியிராத அக்காலத்தோடு அதுவும், ஒரு பெண்ணாகப் பொருத்தி வைத்துப் பார்க்கும் போது அவரது வாழ்க்கை தமிழ்ச் சூழலில் சாதனைமிக்க ஒன்றாகவே கருதத் தோன்றுகிறது.

மறைவு : 20.02.1960

நன்றி: **செம்மொழிச் சிற்பிகள் எனும் நூலிலிருந்து...**

இந்தியாவின் முதல் பெண் ஆசிரியை சாவித்திரிபாய் புலே

சாவித்திரிபாய் புலே (Savitribai Jyotirao Phule, 3 சனவரி 1831 – 10 மார்ச் 1897) ஒரு சமூக சீர்திருத்தவாதியும், கவிஞரும் ஆவார். இவர் இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் என அழைக்கப்படுகிறார். இவர் தன் கணவர் மகாத்மா ஜோதிராவ் (Mahatma Jyotirao Govindrao Phule) இணைந்து, ஆங்கிலேயர் காலத்தில் பெண் உரிமைக்காகவும், கல்விக்காகவும் பாடுபட்டவர். இவர்கள் பெண் கல்விக்காக முதல் பள்ளியை பூனாவிற்கருகிலுள்ள பிடெ வாடாவில் 1848ஆம் ஆண்டு நிறுவினர்.

இவர் 1831இல் மராட்டிய மாநிலத்தில் உள்ள சதாரா மாவட்டத்தில் நைகான் என்னும் சிற்றூரில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். அக்கால வழக்கப்படி இவர் தன் 9ஆம் வயதில் ஜோதிராவ் புலேவை (13 அகவை) 1840இல் மணந்தார். ஜோதிராவ் புலே தனது துணைவி சாவித்திரிபாயை சாதீய, பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் இணைத்துக் கொண்டார். இவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. ஒரு பிராமண விதவையின் யஸ்வந்த் ராவ் என்ற குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தனர்.

ஜோதிராவ் புலே 1846ஆம் ஆண்டில் ஒரு பள்ளியை தொடங்கி சாவித்திரிபாயுடன் பாத்திமா ஷேக் என்ற பெண்ணையும் சேர்த்து சூத்திரர், ஆதிசூத்திரர் ஆகிய பெண்களுக்குக் கல்வி புகட்டினார். பின்னர் 1848ஆம் ஆண்டு சாவித்திரிபாய் ஆசிரியர் பயிற்சி பெற்றார். மீண்டும் 1848ஆம் ஆண்டு புனேவில் 9 மாணவிகளுடன் ஒரு பள்ளியைத் துவங்கி அதில் சாவித்திரிபாய் தலைமையாசிரியராகப் பணி செய்தார். சுமார் 6 மாதங்களுக்குப்பின் அப்பள்ளி மூடப்பட்டு வேறோர் இடத்தில் பள்ளி தொடங்கப்பட்டது. பழமைவாதிகளும் மேல்சாதியினரும் சாவித்திரிபாய் கல்விப் பணி செய்வதைக் கடுமையாக எதிர்த்தனர். பல துன்பங்களுக்கு இடையில் கல்விப் பணியாற்றினார்.

விதவைப் பெண்களின் தலையை மொட்டையடிப்பதைக் கண்டித்து நாவிதர்களை திரட்டி, 1863ஆம் ஆண்டு மிகப் பெரிய போராட்டத்தினை சாவித்திரி பாய் நடத்தினார். 1870ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தினால் அனாதைகளான 52 குழந்தைகளுக்கு உறைவிடப் பள்ளியை நடத்தினார்.

1897இல் ஏற்பட்ட பிளேக்கு தொற்று நோயால் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சையளிப்பதற்காக, சாவித்திரிபாய் புலேயும் அவரது வளர்ப்பு மகனும் மருத்துவருமான யஷ்வந்தும் ஒரு மருத்துவமனையை அமைத்தனர். புனேக்கு அருகிலுள்ள சாசனே மலா (ஹடாப்சர்) என்ற ஊருக்கு வெளியே தொற்றுநோய் பாதிப்புக்கு உட்படாத இடத்தில் அம்மருத்துவமனை இருந்தது. சாவித்திரிபாய் நோயால் பாதிக்கப்பட்டவர்களை அம்மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை பெறச் செய்தார். இப்பணியில் அவருக்கும் நோய்த் தொற்று ஏற்பட்டு மார்ச் 10, 1897இல் இறந்தார்.

1892ஆம் ஆண்டு சாவித்ரிபாய் கல்வியின் தேவை, சாதி எதிர்ப்பு ஆகிய கருத்துகளை வலியுறுத்தும் கவிதைகளான 'கவிதை மலர்கள்' என்ற நூலை வெளியிட்டார்கள்.

அன்புக்கு அன்னை தெரசா

இந்திய மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்ற வெளிநாட்டுப் பெண்மணி அன்னை தெரசா. தன்னலம் கருதாமல் மக்களுக்காகத் தொண்டு புரிந்தவர்.

யூகோஸ்லாவியாவில் உள்ள சுகோப்ஜி என்னும் ஊரில் 1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் நாள் அன்னை தெரசா பிறந்தார். அன்னை தெரசாவின் பெற்றோர்களின் பெயர் 'நிக்கோலஸ் போஜாக்ஷியு–ட்ரானஃபைல்பெரானி'. பெற்றோர்கள் இவருக்கு 'ஆக்னஸ் கோங்க்ஸ்ஹா போஜாக்ஷியு' என்று பெயர் சூட்டினர்,

அரசுப் பள்ளியில் சேர்ந்த தெரசா தாய்மொழியாகிய அல்பேனிய மொழியில் கல்வி கற்றார். அதன்பின்பு ஆங்கில மொழியைக் கற்றுக் கொண்டார்.

இளம் பருவத்திலேயே ஏழை, எளியவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தவர் தெரசா. துன்பப்படும் மக்களுக்காக உதவும் அமைப்பு ஒன்றில் இளம் வயதிலேயே உறுப்பினராகச் சேர்ந்தார். இயேசுநாதர் கூறிய அறிவுரைகளைக் கேட்ட பின்பு மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் தெரசாவின் மனதில் வேர்விட்டு வளர்ந்தது.

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வாழ்ந்த மக்கள் வறுமையாலும், நோய்வாய்ப்பட்டு துன்பப்பட்டும் வந்தனர். இதைக் கேள்விப்பட்டு யூகோஸ்லாவியாவிலிருந்து கிறிஸ்துவத் துறவிகள் பலர் இந்தியாவிற்கு வந்து உதவி புரிந்தனர். தெரசாவுக்கும் அவர்களுடன் சேர்ந்து இந்தியா செல்ல வேண்டும் என விரும்பினாலும், தெரசாவிற்கு பதினைந்தே வயது ஆனதால் குறிப்பறிந்து பொறுப்புடன் பணி செய்வது கடினம் என்பதால் அழைத்துச்செல்லவில்லை.

தெரசா பதினெட்டு வயது நிறைவடைந்ததும் மடத்தில் சேர்ந்து துறவியானார். கன்னியர் மடத்து விதிகளின்படி, பயிற்சி பெறுவதற்கு அயர்லாந்து சென்றார். அங்கு ஒரு வருடம் பயிற்சி பெற்றார்.

இளம் வயதிலேயே இந்தியாவிற்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் 1928ஆம் ஆண்டு நிறைவேறியது. அன்னை தெரசா இந்தியாவிற்கு வந்தார்.

கல்கத்தாவில் (கொல்கத்தா) உள்ள உயர்நிலைப் பள்ளியில் தெரசா ஆசிரியையாகச் சேர்ந்தார். கிறிஸ்துவ சமயக் கல்வியை மிகுந்த ஆர்வத்தோடு அறிந்து கொண்டார்.

டார்ஜிலிங்கில் நடைபெற்ற சமயப் பேரவைக்குச் சென்ற தெரசாவிற்கு அங்கிருந்த சமயச் சான்றோர்கள் அவருடைய இயற்பெயரை மாற்றி '**தெரசா**' எனப் பெயர் சூட்டினார்கள்.

தெரசா தங்கியிருந்த இடத்திற்கு அருகாமையில் குடிசைகளில் இருந்த ஏழை மக்களின் வறுமை நிலையைக் கண்டு மிகுந்த வேதனை அடைந்தார். ஏழை மக்களுக்கு உதவி செய்யும் பணியில் ஈடுபட்டார். 'இறப்போர் நல இல்லம்' ஒன்றினைத் துவக்குவதற்கு ஏற்பாடு செய்தார்.

ஒருநாள் மரத்தடி ஒன்றில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஏழை நோயாளியைக் கண்டு வேதனை அடைந்தார் தெரசா. அந்த நோயாளியை மருத்துவமனையில் சேர்த்துக்கொள்ள மருத்துவமனையின் டாக்டர்கள் மறுத்து விட்டனர். சில மணி நேரங்களில் நோயாளி மரணமடைந்து விட்டார்.

இந்நிகழ்ச்சி தெரசாவின் மனதில் மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியது. திக்கற்ற நிலையில் உயிருக்குப் போராடும் நோயாளிகளை கன்னித்துறவியர் கவனித்து வந்தனர். அவர்களுக்கு மருத்துவ வசதியும் செய்ய ஏற்பாடு செய்தார்.

'**நிர்மல் இருதயம்**' என்னும் பெயரில் இறப்போர் நல இல்லத்தைத் தோற்றுவித்தார். ஆண் நோயாளிகள், பெண் நோயாளிகள் என தனித்தனி பிரிவுகளாக ஏற்படுத்தப்பட்டது. நோயாளிகளுக்கு உணவு, உடை வழங்கப்பட்டது. தேவையான மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டு மிகுந்த அன்புடனும் அக்கறையுடனும் பாதுகாத்து வந்தனர்.

ஒருநாள் குப்பைத் தொட்டியில் காகிதப் பொட்டலத்திற்குள் சற்று முன் பிறந்த குழந்தை சுற்றப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ந்தார். அந்தக் குழந்தையைத் தூக்கி அனைத்துக் கொண்டார். குழந்தையின் தாய் யாரென்று தெரியவில்லை. குழந்தையின் எதிர்காலம் இருள் சூழ்ந்து விடக்கூடாதே என்ற எண்ணத்தில் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தார்.

அநாதைக் குழந்தைகளுக்கும், உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் ஆதரவு அளிக்கும் வகையில் 'குழந்தைகள் காப்பகத்தைத் தோற்றுவித்தார். '**சிசுபவனம்**' எனப் பெயர் சூட்டினார்.

அநாதைக் குழந்தைகளும், உடல் ஊனமுற்ற குழந்தைகளும், குழந்தைகள் காப்பகத்தில் சேர்க்கப்பட்டு அனைத்து வசதிகளும் அளிக்கப்பட்டது.

தொழுநோயாளிகளின் நலனுக்காக தனியாக கல்கத்தாவின் (கொல்கத்தா) புறநகர்ப் பகுதியில் தொழு நோயகம் ஒன்றினை ஏற்படுத்தினார்.

தொழுநோயாளிகளின் இல்லத்தில் குடும்பத்தினரால் ஒதுக்கப்பட்ட தொழுநோயாளிகளை அன்னை தெரசாவும், தொண்டர்களும் அருவெறுப்பு கொள்ளாமல் பாதுகாத்து வந்தனர்.

அன்னை தெரசாவின் தொண்டுக்காக இந்திய அரசு 1962ஆம் ஆண்டு '**பத்மஸ்ரீ**' பட்டத்தை வழங்கியது. பிலிப்பைன்ஸ் நாடு '**ராமோன் மாக்சேஸே**' என்னும் பரிசினை வழங்கிக் கௌரவித்தது.

போப்பாண்டவர் ஆறாவது பால் அவர்கள் உலக அமைதிப் பரிசை அன்னை தெரசாவிற்கு வழங்கினார் வாஷிங்டனில் சிறப்பு டாக்டர் பட்டமும், அமெரிக்க நாட்டின் '**குட் சமாரிடன் பரிசு**' அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது.

ஜவஹர்லால் நேரு அவர்களால், உலக ஒப்புரவுப் பரிசு 1972ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டின் டெம்பிள்டன் பரிசும் வழங்கப்பட்டது.

1979ஆம் ஆண்டு அன்னை தெரசாவிற்கு நோபல் பரிசும் 1980ஆம் ஆண்டு '**பாரத ரத்னா**' விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தனக்குக் கிடைத்த பரிசுகளை விற்று ஆதரவு அற்றவர்களுக்கும், வறுமையால் வாடியோருக்கும் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவினார்.

பெண் குலத்திற்கே பெருமை சேர்க்கும் வகையில் வாழ்ந்த அன்னை தெரசா 1997ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

நன்றி: **பெண்கள் நாட்டின் கண்கள்**
எனும் நூலிலிருந்து...

உலக வனவிலங்கு தினம்

அழிந்துவரும் வன விலங்குகளைக் காப்பதற்காகவும், இயற்கைச் சமநிலை மாறுபடாதிருக்க விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது. நாட்டின் வேலியாய் விளங்கும் காடுகளையும், விலங்குகளையும் காப்பது குடிமக்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை கருத்தில் கொண்டு அனைத்துஉயிரினங்களையும்பூமியில்நீடித்துநிலைக்கவைத்தல்' என்றகருப்பொருளுடன் இவ்வாண்டின் உலக வனவிலங்கு தினம் கொண்டாடப்படுகிறது.

உலக வனவிலங்கு தினம் அருகிவரும் காட்டு விலங்குகள் மற்றும், தாவரயினங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கமாக, ஒவ்வொரு ஆண்டும், மார்ச் 3 இல் உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. 2013, டிசம்பர் 20 அன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA) 68 ஆவது அமர்வில் "காட்டு விலங்குகள், மற்றும் தாவரங்கள் அருகிவரும் உயிரினங்களின் சர்வதேச வர்த்தக சாசனம்" (CITES) மூலம் இந்நாளை உலக வனவிலங்கு நாளாக தாய்லாந்தினால் முன்மொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இசைக் குயில் எம்.எஸ். சுப்புலெட்சுமி

எம்.எஸ். சுப்புலெட்சுமி அவர்கள் சுப்பிரமணி அய்யர், சண்முக வடிவு தம்பதியருக்கு 16.09.1916 அன்று மகளாகப் பிறந்தார். இவரது தந்தை பிரபல வீணை வித்வானாவார். இவருக்கு சக்திவேல் என்ற சகோதரனும், வடிவாம்பாள் என்ற பெயர் கொண்ட சகோதரியும் உண்டு.

இவரது இளமைக்கால குருவாக தன் தாயாரிடமே வீணையும், வாய்ப்பாட்டும் கற்றுக்கொண்டார். இவர் கற்க வேண்டிய கலைகளை மிக எளிதில் புரிந்துகொண்டு, அதை அப்படியே மிக விரைவில் ஒப்புவிக்கும் திறன் கொண்டவராகும். இவர் கற்ற இசையை தமது பத்தாவது வயதிலேயே இசைத்தட்டில் பதியும் வாய்ப்பினை பெற்றார்.

தமது பதிமூன்றாவது வயதிலேயே மேடையேறி பாடத் தொடங்கினார். இவர் மேலும் தமது இசைத்திறனை வளர்த்துக்கொள்ள மதுரையிலிருந்து குடும்பத்துடன் சென்னையில் வந்து குடியேறினார். தேனினும் இனிய குரல் வளம் கொண்ட தன் மகளின் குரலை, இசைத்துறையில் அவள் குரல் உலகெங்கும் ஒலிக்கச் செய்ய தாயார் ஆயத்தப்படுத்தினார்.

சென்னையில் ஒரு சில கச்சேரிகளே ஆரம்ப காலத்தில் செய்தாலும், அதுவே இவரது இசைப்புகழ் பரவ அடிப்படை காரணமாய் அமைந்தது எனலாம். இவரது 17ஆவது வயதில் சென்னை மியூசிக் அகாடமி, இவரது இசையை அங்கீகாரம் அளித்து இவரது இசைக்கு வாய்ப்புகளை வாரி வழங்கியது.

காலப்போக்கில் இவரை எம்.எஸ். என்று சுருக்கமா செல்லமாக அழைக்கத் தொடங்கினர். எம்.எஸ். என்ற சின்னக்குயில் தனது தேமதுரத் தமிழோசையை தமிழகமெங்கும் பரப்பி வந்தது.

இவரது இசைத்திறன் திரைப்படத் துறையினரில் செவிகளில் இன்பத்தேனாய் பாயவே, இயக்குனர் கே. சுப்ரமணியம் ‘சேவாசதனம்’ எனும் திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பளித்தார். அத்திரைப்படத்தில் எம்.எஸ். பாடிய பாடல்கள் தமிழக பட்டிதொட்டியெங்கும் எதிரொலித்து மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றது.

அடுத்து இவர் ஜி.என்.பியோடு இணைந்து ‘சகுந்தலை’ என்ற படத்தில் இணைந்து நடித்த பாடல் மிகவும் பிரபலமானது. இப்படப்பிடிப்பின்போது இப்படத்தின் தயாரிப்பாளரும், சிறந்த தத்துவஞானியுமான டி.சதாசிவம் எம்.எஸ். ஸை 1940ஆம் ஆண்டில் மணம் முடித்துக் கொண்டார்.

எம்.எஸ்.ஸின் குரலுக்கும் என்றும் பதினாறு என்பதுபோல் அவர் முதுமையடைந்த காலத்திலும் அவரது குரல் மட்டும் என்றும் இளமையாகவே விளங்கிற்று.

1982இல் லண்டனிலும், ரஷ்யாவிலும் நடந்த பரதக் கலைவிழாவை தொடங்கிவைக்க வந்த அழைப்பை ஏற்று பல்லாயிர மைல்கள் கடந்து சென்று இன்முகத்துடன் செய்து முடித்தார்.

இசை உலகில் முடிசூடா ராணியாக வலம் வந்த எம்.எஸ்.ஸின் குரல் இனிமையை புகழ்ந்து, அன்றைய பாரதப் பிரதமர் புகழ்ந்து பாராட்டினார்.

இவர் ஒரு பாடகர் மட்டுமின்றி, ஒரு சமூக சேவகியுமாவார். தேசப்பிதா காந்தி, கஸ்தூரிபாய் காந்தியின் மறைவிற்குப் பின், அவர்கள் நினைவைப் போற்றும் வகையில் மணிமண்டபம் எழுப்ப பண உதவிகளைச் செய்தார்.

இவர் 1966ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐ.நா. சபையில் பாடச் சென்றார்.

1954ஆம் ஆண்டு நடந்த குடியரசு தினவிழாவின்போது இவருக்கு ‘பத்மபூஷன்’ பட்டம் வழங்கப்பட்டது. 1956இல் ஜனாதிபதியின் விருது பெற்றார்.

1967ஆம் ஆண்டு ‘டாக்டர்’ பட்டம் வழங்கப்பட்டது.

1969ஆம் ஆண்டு ‘சங்கீத கலாநிதி’ எனும் விருதினை மியூசிக் அகாடமி முதன் முறையாக ஒரு பெண் கலைஞருக்கு வழங்கி கௌரவித்தது.

1971இல் திருப்பதி வெங்கடேஸ்வரா யூனிவர்சிட்டியின் சார்பில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் உயரிய விருதான ‘மக்சாசே’ எனும் விருதினை 1974இல் வழங்கியது. அதன்மூலம் கிடைத்த பெரும் தொகையைத் தொண்டு நிறுவனங்களுக்கு பங்கிட்டு அளித்துவிட்டார்.

மீண்டும் 1975இல் ‘பத்ம விபூஷன்’ விருது ‘சப்தகிரி சங்கீத வித்வான்’ போன்ற விருதுகளை திருப்பதி வெங்கடேஸ்வரா தியாகராஜ ஸ்வாமி விழாக் கமிட்டியாரால், வழங்கப்பட்டது.

'ஆந்திரா ஆஸ்தான சங்கீத விதூஷமணி' என்ற கௌரவ பட்டத்தை அம்மாநில அரசு வழங்கி கௌரவித்தது.

யுனெஸ்கோவில் உள்ள அகில உலக மியூசிக் கௌன்சிலால் கௌரவ அங்கத்தினராக 1981ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டார்.

'தேசிகோத்தம்' என்ற விருதினை சாந்தி நிகேதன் விஸ்வ பாரதி பல்கலைக்கழகம் வழங்கியது.

இதே ஆண்டில் சென்னை பல்கலைக்கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கியது.

1977ஆம் ஆண்டு அமெரிக்காவில் பல இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினார்.

1987இல் மாஸ்கோவில் இந்திய கலைவிழா நிகழ்ச்சியை நடத்தி, இந்திய பண்பாட்டு கலாச்சாரங்களை பரப்பினார்.

இவர் தனது இசைப் பணியை லண்டன், ஃப்ராங்கக் ஃபர்ட், ஜெனீவா, கெய்ரோ போன்ற மேலை நாடுகளுக்குச் சென்று தன் இசைப் பணியைத் தொடர்ந்தார்.

இசை மழையை உலகெங்கும் பரப்பி பாடி வந்த இனிய இசைக்குயில் 11.12.2004 அன்று தன் இன்னுயிர் நீத்து, பாடும் வானம்பாடியாய் விண்ணுலகை நோக்கிப் பறந்து சென்றது.

நன்றி: **சரித்திரம் படைத்த சாதனைப் பெண்கள்**

உலக சிட்டுக்குருவிகள் தினம்

சிட்டுக்குருவிகள் வீட்டுக்குருவி (World Sparrow) என்று அழைக்கப்படுகிறது. விவசாய நாடான இந்தியாவில் மட்டும் அல்லாத உலகின் பல நாடுகளிலும் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. சிட்டுக் குருவிகளின் இனம் வேகமாக அழிந்து வருகிறது.

சிட்டுக்குருவியின் மேல்பகுதியில் சாம்பல் நிறமாகவும் அடிப்பகுதி வெண்மை நிறமாகவும் இருக்கும். கழுத்தில் கருமையான திட்டுக்களோடு, பார்க்க அழகாக இருக்கும். சிட்டுக்குருவிகள் மக்கள் வசிக்கும் பகுதிகளிலேயே கூடுகட்டி வசிக்கின்றன. அவை மனிதர்களைக் கண்டு அஞ்சுவதில்லை. சிட்டுக்குருவிகளை மனிதர்களும் நேசிக்கின்றனர்.

சிட்டுக்குருவிகள் வீட்டுமாடம், பரண், ஓடுகளின் இடைவெளி போன்ற இடங்களில் கூடுகட்டி வசித்து வருகின்றன. நகரங்களில் கான்கிரீட் வீடுகளும், அடுக்குமாடிக் குடியிருப்புகளும் வந்த பிறகு அவை கூடுகட்டுவதற்கு ஏற்ற வசதிகள் இல்லாத காரணத்தால் நகரங்களில் இருந்து வெளியேறிவிட்டன.

சிட்டுக்குருவி தினம்

சிட்டுக்குருவிகளைப் பாதுகாக்க வேண்டும் என்கிற எண்ணம் உலகம் முழுவதும் உருவாகியுள்ளது. இந்தியாவில் நேச்சர் பார்எவர் கழகம் (Nature Forever Society), பிரான்ஸ் நாட்டின் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் உலகளவில் உள்ள பல அமைப்புகள் சேர்ந்து சிட்டுக்குருவிகளைப் பாதுகாக்க வேண்டும் என்கிற நோக்கில் உலக சிட்டுக்குருவிகள் தினமாக மார்ச் 20ஐ அறிவித்தனர். பொதுமக்களிடையே சிட்டுக்குருவி சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்த 2010ஆம் ஆண்டுமுதல் உலக சிட்டுக்குருவிகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

சிட்டுக்குருவி இனங்களை மீண்டும் உயிர்ப்பிக்க டெல்லி மாநில அரசானது டெல்லி மாநிலப் பறவையாக சிட்டுக்குருவியை அறிவித்துள்ளது. இந்திய அஞ்சல் துறையும் சிறப்புத் தபால் உறையை வெளியிட்டுள்ளது. சிட்டுக் குருவிகளைப் பாதுகாக்க பல தன்னார்வ அமைப்புகளும் முன் வந்துள்ளன. நமது செல்லச் சிட்டுக்குருவிகளை பாதுகாக்க நாமும் அவைகளுக்கு நல்ல நீரும், உணவும், வாழ இருப்பிடத்தையும் கொடுத்து உதவுவோம்.

நன்றி: **சர்வதேச தினங்கள் எனும் நூலிலிருந்து...**

தேசம், இனம், மொழி, கலாச்சாரம் கடந்து ஒரே ஜனநாயகமாக இயங்குகிறது

காமன்வெல்த் நாடுகளை பொதுநலன் விரும்பும் நாடுகள் என்கின்றனர். இவற்றில் 54 நாடுகள் உறுப்பினர்களாக இருக்கின்றன. தேசம், இனம், மொழி, கலாச்சாரம் கடந்து ஒரே ஜனநாயகமாக இயங்குகிறது. சமத்துவம், அமைதி மற்றும் அனைத்து நாடுகளையும் புரிந்து கொண்டு ஒற்றுமையுடன் இயக்கக்கூடியதாக காமன்வெல்த் இருக்கிறது. காமன்வெல்த்தின் தலைமையகம் லண்டனில் உள்ள மெல்போரா ஆகும்.

துவக்கம் :

காமன்வெல்த் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தால் உருவாக்கப்பட்டது. 1884ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் அடிலேட், தென் ஆஸ்திரேலியா, லார்டு ரோஸ்பெரி போன்ற நாடுகளை சுதந்திரமாக செயல்பட விட்டதால் இந்த காமன்வெல்த் உருவானது. ஆரம்பத்தில் பிரிட்டிஷ் காலனி நாடுகளைக் கொண்ட நாடுகளை இணைத்து காமன்வெல்த் உருவாக்கப்பட்டது. ராணி எலிசபெத் இதன் தலைவரானார். இவரின் கிரீடம் இதன் சின்னமாக இருக்கிறது.

1964ஆம் ஆண்டு முதல் மேபிள் இலை பொறிக்கப்பட்ட சின்னம் காமன்வெல்த்தின் கொடியாக உள்ளது. 1965 முதல் தலைமைச் செயலகமும் லண்டனில் செயல்பட்டு வருகிறது.

விதிமுறைகள் :

காமன்வெல்த் அமைப்பில் உலகில் உள்ள எந்த நாடு வேண்டுமானாலும் உறுப்பினர் ஆகலாம். அதே சமயத்தில் உறுப்பினரிலிருந்து விலகியும் செல்லலாம். ஜனநாயகம் தவறிய நாடுகளை நீக்கும் அதிகாரம் காமன்வெல்த்திற்கு உண்டு. பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நடப்பதால் அது 1999 முதல் 2000 வரை நீக்கப்பட்டது. நைஜீரியா 1995 மற்றும் 1999 ஆண்டிலும், ஜிம்பாவே 2002 ஆண்டிலும் நீக்கப்பட்டது. காமன்வெல்த்தில் 54 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன.

நோக்கம் :

காமன்வெல்த் நாடுகளின் முன்னேற்றத்திற்காக பாடுபடுகிறது. இந்நாடுகளில் உள்ள கலாச்சாரங்களைப் பாதுகாத்தல், அரசியல், பொருளாதார முன்னேற்றம், அமைதி போன்றவற்றிற்கு கூட்டமாக முடிவு எடுத்து பாடுபடுதல் ஆகும். நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை காமன்வெல்த் நாடுகளுக்கு இடையே போட்டி நடத்தப்படுகிறது. 1987 முதல் இந்த நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. கல்விமீது ஆர்வம் காட்டுகிறது. மேலும், இந்நாடுகளுக்கான வணிக கவுன்சில் 1997 முதல் செயல்படுகிறது. காமன்வெல்த்தின் கீழ் உள்ள நாடுகள் 25 சதவிகிதம் வணிகம் செய்கின்றனர்.

நன்றி: **சர்வதேச தினங்கள் எனும் நூலிலிருந்து...**

உடலின் மூளை, இதயம் எப்படி முக்கியமோ அதுபோல் சிறுநீரகமும் மிகமிக முக்கியமான உறுப்பாகும். சிறுநீரகம் சரிவர செயல்படவில்லை என்றால் வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிடும். ஆகவே, சிறுநீரகத்தைப் பாதுகாக்கவும், நோய் வராமல் தடுக்கவும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உலக சிறுநீரக தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் இரண்டாவது வியாழக்கிழமை கொண்டாடப்படுகிறது.



மனித உடலில் இரண்டு சிறுநீரகங்கள் உள்ளன. உலகில் பலருக்கு ஒரு சிறுநீரகம் இருக்கிறது. ஒருவர் உயிர் வாழ ஒரு சிறுநீரகமே போதும். இந்தச் சிறுநீரகம் அவரை விதை வடிவத்தில் இருக்கும். 10 செ.மீ. நீளமும், 6 செ.மீ. அகலமும், 3.5 செ.மீ தடிமனும் கொண்டது. இந்தச் சிறுநீரகங்கள் இரத்தத்தை சுத்தப்படுத்தி, உடலில் உள்ள கழிவுகளை சிறுநீராக வெளியேற்றுகின்றன.

உலக சிறுநீரக தினம்

ஹால்பின் (Halpin) என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த 14 வயது மகன் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டான். ஆகவே, இவர்கள் ஹால்பின் அமைப்பை 1989ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். இந்த அமைப்பின் மூலம் சிறுநீரக நோய்கள்மீது ஆய்வு செய்யப்பட்டது.

சிறுநீரக நோய்க்கு எதிரான ஆய்வு மற்றும் அதனை குணப்படுத்துதல் ஆகியவையே இதன் முக்கிய குறிக்கோளாகும். மேலும் இதற்கான கல்வி, பயிற்சி போன்றவற்றையும் வழங்குகிறது. இந்த அமைப்பு அமெரிக்காவில் மட்டும் தனது சேவையைச் செய்யாமல் வாய்ப்பு கிடைக்கும்போது உலகின் பிற பகுதிகளிலும் செய்து வருகிறது. சிறுநீரக ஆய்வை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகையையும் கொடுத்து உதவுகிறது. சர்வதேச சிறுநீரக அமைப்பு ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த சர்வதேச (IFKF) அமைப்பானது 2001ஆம் ஆண்டில் 19 உறுப்பினர்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2006ஆம் ஆண்டில் 37 நாடுகளில் 50 உறுப்பினர்களைக் கொண்டு செயல்படுகிறது. இதன் முயற்சியால் உலக சிறுநீரக தினம் 2006ஆம் ஆண்டுமுதல் கொண்டாடப்படுகிறது. ஐ.நா.சபையும் சிறுநீரகத்தின் அவசியத்தை உணர்ந்து பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மீது கவனம் ஏற்படும் வகையில் இத்தினத்தைக் கடைபிடிக்க உலக நாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. இத்தினத்தில் நோய் தொடர்பான விழிப்புணர்வு குறித்தும், பாதுகாப்பு முறைகள் குறித்தும் எடுத்துக் கூறப்படுகிறது.

நன்றி: **சர்வதேச தினங்கள் எனும் நூலிலிருந்து...**

நோய் தீர்க்கும் அதிமதுரம்

குன்றி மணி என்னும் செடியின் வேர் அதிமதுரம் என்று கூறப்படுகிறது. இனிப்பு சுவையுள்ள இந்த அதிமதுரம் நோய் குறைபாடுகளை சரிசெய்யக் கூடியது. சூட்டினால் வரும் இருமலுக்கு அதிமதுரம், கடுக்காய், மிளகு மூன்றையும் சம அளவு எடுத்து வறுத்து பொடியாக்கி தேனுடன் கலந்து சாப்பிட்டால் இருமல் குணமாகும். அதிமதுரத் துண்டு ஒன்றை வாயில் கடித்து அதன் சாற்றை சுவைத்தாலே இருமல் குறையும். அதிமதுர சூரணத்தை தேனில் குழைத்து தினமும் மூன்று வேளை சாப்பிட்டால் தொண்டைக் கட்டு, இருமல், சளி குணமாகும். அதிமதுரத்தைத் தூளாக்கி, பசும்பாலில் ஊற வைத்து தலையில் அழுத்தி தேய்த்து அரை மணி நேரம் கழித்து குளித்தால் இளநரை நீங்கும். தலைமுடி மினு மினுப்பாக மாறும், சிறு புண்கள் குணமாகும். அதிமதுரத் தூளை பாலில் கலந்து சாப்பிட்டால் மலச்சிக்கல் நீங்கும்.

நன்றி : **மங்கை சிறப்பிதழ் என்னும் நூலிலிருந்து...**

உலக நுகர்வோர் உரிமைகள் தினம்

இந்த உலகில் பொருட்களை விலை கொடுத்து வாங்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய பெரிய பெரிய பன்னாட்டு முதலாளிகளாக இருந்தாலும், அவர்களும் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான மூலப்பொருட்களை வேறு ஒருவரிடம் வாங்கித்தான் ஆகவேண்டும். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் நுகர்வோர்தான், பயனீட்டாளர்தான், உபயோகிப்பாளர்கள்தான், ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் சில வியாபாரிகள் அந்தப் பொருளின் உண்மையான மதிப்பைவிடப் பலமடங்கு விலை உயர்த்தி, அநியாய விலைக்கு விற்பனை செய்து கொள்ளை லாபம் அடிப்பர். யுத்தக் காலங்களிலும், இயற்கைச் சீற்றத்தின்போதும் இதுபோன்று நடந்துள்ளது. முதலாம் உலகயுத்தம், இரண்டாம் உலகயுத்தத்தின் போது பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டு வியாபாரிகள் பொருட்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்தனர். உலகம் முழுவதும் மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இரண்டாம் உலகயுத்தத்தின் ஜப்பானில் சர்க்கரையை மிகமிக அதிக விலைக்கு வியாபாரிகள் விற்பனை செய்தனர். அங்கு வாழ்ந்த பெண்கள் ஒன்றுகூடி ஒரு சங்கத்தை உருவாக்கி இனி சர்க்கரையைப் பயன்படுத்துவதில்லை என முடிவு செய்தனர். இதன் பின்னர்தான் வியாபாரிகள் சர்க்கரையின் விலையைக் குறைந்தனர். இதுபோன்ற பல சம்பவங்கள் உலகின் பல பகுதிகளிலும் நடந்துள்ளது.

அமெரிக்க அதிபர் கென்னடி அவர்கள் 1962ஆம் ஆண்டு மார்ச் 15இல் நடைபெற்ற ஒரு காங்கிரஸ் மாநாட்டில் 4 உரிமைகளைப் பிரகடப்படுத்தினார். அவை

1. பொருளின் பாதுகாப்பிற்கான உரிமை
2. தகவல்களைப் பெறும் உரிமை
3. பொருட்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மற்றும்
4. குறைகளைக் கேட்கும் உரிமை போன்றவையாகும். அவர் மாநாட்டில் கூறுகையில் நுகர்வோர் என்பவர் வேறுயாருமல்ல, நாம் அனைவரும்தான் என்றார். இந்தப் பிரகடனம்தான் நுகர்வோர் தினத்திற்கு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

நுகர்வோர் தினம்

ஐ.நா.சபையின் வேண்டுகோளுக்கு இணங்க உலகம் முழுவதும் நுகர்வோர் தினம் மார்ச் 15, 1983 முதல் கொண்டாடப்படுகிறது. ஏப்ரல் 9, 1985ஆம் ஆண்டு ஐ.நா. அமைப்பு நுகர்வோருக்கான சில பாதுகாப்பு அறிவுரைகளை வழங்கியது. இது ஒரு அமைப்பையும் (LOCU) உருவாக்கியது. இதன் மூலம் தேசநுகர்வோர் நலன்களைப் பாதுகாக்க அரசுகள் புதிய மசோதாக்களைக் கொண்டுவர ஆலோசனை வழங்கியது.

கென்னடியின் நான்கு பிரகடனத்தோடு ஐ.நா. அமைப்பும் சில கொள்கைகளைப் பிரகடனம் செய்தது.

இந்தியா:

இந்தியாவில் நுகர்வோரின் நலன்களைப் பாதுகாக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. நுகர்வோர் தங்கள் குறைகளை நுகர்வோர் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லலாம். இதற்கு வக்கீல்கள்கூடத் தேவை இல்லை. பணம் செலவிடாமலே குறைகளை முறையிடலாம். மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் குறை தீர்க்கும் மன்றங்கள் செயல்படுகின்றன. நுகர்வோர் பாதுகாப்பிற்கான பல நல்ல அம்சங்கள் சட்டத்திலே இடம் பெற்றுள்ளன. குறிப்பாக போலியான பொருட்களை தயார் செய்வதும், அதனை விற்பனை செய்வதும் நேர்மையற்ற வணிகமுறை என்கிறது. உயிரைப் பறிக்கும், உடலுக்கு கேடு விளைவிக்கும் பொருட்களை உற்பத்தி செய்வதைத் தடுக்கவும், விற்பனையைத் தடுத்து நிறுத்தவும் அதிகாரம் இச்சட்டத்திற்கு உண்டு.

ஆகவே, பாதுகாப்பற்ற மருந்துகள் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டியுள்ளது. பாதுகாப்பற்ற மருந்துகள் என்றால் உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பதாகும் உலக நாடுகள் பாதுகாப்பான மருந்துகளை நுகர்வோருக்குக் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என 2007ஆம் ஆண்டு உலக நுகர்வோர் தினத்தில் ஐ.நா.சபை கேட்டுக் கொண்டுள்ளது.

நன்றி: **சர்வதேச தினங்கள் எனும் நூலிலிருந்து...**

வனங்களை பாதுகாப்பதன் அவசியம் ஏன்?

வன பாதுகாப்பு என்பது வனங்களை பராமரிப்பதும் காப்பதும் ஆகும். சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் வனங்களை அழிப்பதற்கு எதிரான செயல்பாடுகளை இது உள்ளடக்கியதாகும். நமது சுற்றுச்சூழலை சமநிலையில் வைத்துக் கொள்வதற்கு அனைத்து இயற்கை வளங்களையும் பாதுகாப்பதென்பது மிகமிக அவசியமானதொன்றாகும். நமக்கும் நம்முடைய சுற்றுச்சூழலுக்கும் காடுகள் ஏன் அவசியமானவைகளாக இருக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

- சோலைக் காடுகளை அதன் மரபார்ந்த மரங்களுக்காகவும் அதன் பயன்பாடுகளுக்காகவும் உறுதியாக பராமரிக்கப்பட வேண்டும்.
- காடுகளின் முக்கியமான செயல்பாடு என்னவெனில், ஒளிச்சேர்க்கையின் உபபொருளாக பெருமளவில் ஆக்ஸிஜனை உற்பத்தி செய்வதாகும். அனைத்து விலங்கினங்களுக்கும் ஆக்ஸிஜன் என்பது முக்கியமான சுவாச வாயு என்பதோடு மட்டுமின்றி நம் அனைவரின் உயிர் வாழ்க்கையையும் அது உறுதி செய்கிறது.
- ஒளிச்சேர்க்கையின் போது தாவரங்கள் காற்று மாசுபடுவதற்கான முக்கிய காரணியான கார்பன்–டை–ஆக்சைடை காற்றிலிருந்து உள்ளிழுத்துக் கொள்கிறது. ஆகவே காடுகள் காற்று மாசுபடுதலை குறைக்கிறது.
- மண் அரிப்பை தடுப்பதுடன் மண் மாசுபடுதலையும் காடுகள் தடுக்கிறது. உண்மையில் காடழிப்பானது மிகப் பெருமளவில் மண் அரிப்பிற்கு வழிவகுப்பதுடன், அதன் மூலம் மேற்பகுதி மண்ணை தளர்வடையச் செய்கிறது.
- நீர் சுழற்சியிலும் மற்றும் சூழலியலில் உள்ள காற்றின் ஈரப்பதத்தை கட்டுப்படுத்துவதிலும் காடுகள் மிக முக்கிய பங்களிப்பைச் செய்கின்றன.
- இறுதியாக, காடுகள் என்பது பல இலட்சக்கணக்கான விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், பூச்சியினங்களுக்கும் இயற்கை, இல்லம் மட்டுமல்ல, அவைகளின் வாழ்விடமும் ஆகும்.

காடுகளை பாதுகாப்பதற்கான வழிகள்

கட்டுப்படுத்தப்பட்ட காடழித்தல்

மரங்களை வெட்டுவதென்பதை முழுமையாக தவிர்க்க இயலாது. அதை நாம் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். உதாரணமாக மரக் கன்றுகளையும் முதிர்ச்சியடையாத மரங்களையும் வெட்டுவதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். அதேபோன்று, வணிக ரீதியில் மிகப்பெரிய அளவில் மரங்களை வெட்டுவதை தவிர்க்க வேண்டும். ஒட்டு மொத்தமாக அனைத்து மரங்களையும் வெட்டாமல் சிலவற்றை தேர்வு செய்து வெட்டினால் பயன்தரக் கூடிய வகையில் அமையும்.

வனத் தீக்கு எதிராக பாதுகாத்தல்

காட்டுத் தீ என்பது காடுகளின் இழப்பிற்கு மிகச் சாதாரணமான மற்றும் கொடிய காரணமாகும். இவைகள் இயற்கையாகவோ அல்லது மனிதர்களின் அலட்சியப் போக்கினாலோ அல்லது சில நேரங்களில்

உள்நோக்கத்துடனோ ஏற்படுகிறது. ஒருமுறை காட்டுத் தீயானது காட்டில் பரவிவிட்டால், அதனை கட்டுப்படுத்துவதென்பது மிகக் கடினமானதாகும். இதுபோன்ற நேர்வுகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உறுதியாக எடுக்கப்பட வேண்டும். தீக்கோடுகளை உருவாக்குதலும் இரசாயன பொருட்களை பரப்புதலும், சருகுகளையும் காய்ந்த மரங்களையும் அப்புறப்படுத்தலும் முக்கியமானதாகும்.

காடுகளை வளர்த்தல்

இது ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் அதிக அளவில் மரங்களை வளர்க்கும் செயல்முறையாகும். மரங்களை பெயர்த்தெடுத்து வேறு பகுதிகளில் நடுவதன் மூலமாகவும், அல்லது மரக்கன்றுகளை நடச்செய்வதன் மூலமாகவும் காடுகளின் பரப்பளவை அதிகரிக்கலாம். அனைத்து விதமான சுற்றுச்சூழல் மாசுபாடுகள் மற்றும் மரங்களை அழிப்பதன் மூலம் நமது சுற்றுச்சூழலின் சமநிலையில் ஏற்படுகின்ற தாக்கத்தினை தடுப்பதற்கான ஒரு முயற்சியாகும்.

நெகிழி இல்லா காடுகள்

நெகிழியின் எவ்வடிவத்தையும் வனத்தில் தவிர்க்க வேண்டும். மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் (5 mmக்கு குறைவான) விலங்குகளின் மீதும், மனிதர்களின் மீதும் நீக்க முடியாத அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

காடுகள் ஏன் முக்கியம் என்பதற்கான காரணங்கள்

1. நாம் சுவாசிக்க உதவுகிறது.

காடுகள், நாம் சுவாசிக்கும் போது வெளியேற்றப்படும் கார்பன்–டை–ஆக்சைடு என்ற நச்சுக் காற்றை உள்வாங்கிக் கொண்டு நாம் உயிர் வாழத் தேவையான ஆக்ஸிஜன் வாயுவை அளிக்கிறது. அதிக இலைகள் உள்ள ஒரு முற்றிய மரம், இரண்டிலிருந்து 10 நபர்களுக்கு ஒரு நாளைக்கு தேவையான ஆக்ஸிஜனை வழங்குகிறது. பூமிக்கு தேவையான பாதி ஆக்ஸிஜனின் தேவையை பெருங்கடலில் உள்ள ஃபைடோபிளாங்டன் வழங்குகிறது. இருந்தபோதிலும் காடுகள் சுத்தமான காற்றிற்கு ஒரு முக்கிய ஆதாரமாக உள்ளது.

2. காடுகள் மரங்களை மட்டும் கொண்டவை அல்ல

பூமியில் வாழும் நமக்கு தெரிந்த உயிரினங்களில் 80 சதவீத பல்லுயிர் சூழலியலை உள்ளடக்கி ஏறக்குறைய பாதி உயிரினங்கள் காட்டில் வாழ்கின்றன. பூச்சியினங்கள் மற்றும் புழுக்கள் மண்ணிற்கு உரமூட்டுகின்றன, தேனீக்கள் மற்றும் பறவைகள் விதைகளையும், மகரந்த தூள்களையும் பரவச் செய்கின்றன. மற்றும் ஓநாய்களும் பெரும் பூனைகளும் பசியோடு இருக்கின்ற தாவர உண்ணிகளின் எண்ணிக்கையினை கட்டுப்பாட்டில் வைக்கின்றன. மனிதர்களின் பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் எனும் இரண்டு காரணிகளுக்கிடையே உயிர்ப்பன்மை என்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது. மேலும் மரங்களை வெட்டுவதன் மூலமாக உலகம் முழுவதும் இது அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகிறது.

3. மனிதர்களும் அங்கு வாழ்கிறார்கள்

உலக அளவில் சுமார் 30 கோடி மக்கள் காடுகளில் வாழ்கிறார்கள். இதில் 6 கோடி மக்கள் மண்ணின் மைந்தர்களாவர். அவர்களின் வாழ்வாதாரம் முழுவதும் காடுகளையே சார்ந்ததாகும். காடுகளின் விளிம்புப் பகுதிகளில் பல இலட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், நகர்ப்புற மர வளர்ப்பில் ஏற்படுகின்ற சிறு மாறுபாடு கூட உடமைகளின் மதிப்பீட்டில் மிகப்பெரிய உயர்வை ஏற்படுத்துகிறது. பல்வேறு பலன்களுடன் குற்றங்களின் எண்ணிக்கையை குறைக்கிறது.

4. நம்மை குளிர்ச்சியாக வைத்திருக்கிறது

நகர்ப்புற பகுதிகளில் உள்ள மரங்கள் குளிர் சாதன மற்றும் மின்விசிறிகளினுடையே தேவையினை குறைத்து நாம் வசிக்கும் கட்டடங்களையும் மற்றும் இடங்களையும் குளிர்ச்சியாக வைத்திருக்கிறது. அதே நேரத்தில் பெருங்காடுகள் வெப்பத் தீவு விளைவினை ஒழித்து மண்டல வெப்பநிலையை தனது குளிர்ந்த காற்றால் கட்டுப்படுத்துகிறது.

5. பூமியை குளிர்ச்சியாக வைத்திருக்கிறது

பூமியை வெப்பமாக்கும் கார்பன்–டை–ஆக்சைடு வாயுவை மரங்கள் உள்வாங்கிக் கொள்வதால் வெப்பம் குறைகிறது. தாவரங்கள் ஒளிச்சேர்க்கைக்கு (photosynthesis) கார்பன்–டை–ஆக்சைடு வாயு தேவைப்படுகிறது. ஆனால், பல்வேறு உமிழ்வுகளை உட்கொள்வதன் மூலமாக அடர்த்தியாக உள்ள காற்றிலிருந்து கார்பன்–டை–ஆக்சைடை உறிஞ்சிக் கொள்வதன் மூலம் பச்சை வீட்டு விளைவுக்கு எதிராக காடுகள் போராடுகின்றன. கார்பன்–டை–ஆக்சைடை தண்டுகளிலும், இலைகளிலும், மண்ணிலும் பல நூற்றாண்டுகளுக்கு அவை சேகரித்து வைத்து விடுகின்றன.

6. மழை பெய்யச் செய்கிறது

பெருங்காடுகள் மண்டல வெப்பநிலை வகைப்பாட்டில் தாக்கத்தினை ஏற்படுத்தி நுண்ணிய காலநிலை மாற்றத்தினையும் ஏற்படுத்துகின்றன. அமேசான்

மழைக்காடுகளில் சீரான மழைப்பொழிவினை ஏற்படுத்துவதோடு மட்டுமின்றி சுற்றியுள்ள பண்ணை நிலங்களுக்கும் மழைப் பொழிவினை ஏற்படுத்துகின்றது. வெகுதொலைவில் உள்ள வட அமெரிக்காவில் உள்ள பெரும் சமவெளி பகுதிகளிலும் மழை பெய்யச் செய்கிறது.

7. வெள்ளப் பெருக்கினை தடுக்கிறது

பெரு மழைக் காலங்களில், குறிப்பாக, ஆற்றுப் படுகைகள் மற்றும் தாழ்வான பகுதிகள் தாவரங்களின் வேர்கள் மிக முக்கிய பங்காற்றுகின்றன. காட்டு வெள்ளம் ஏற்படுகின்ற பொழுது, தாவரங்களினுடைய வேர்கள் பெருமளவிலான நீரை உறிஞ்சிக் கொள்வதால், நீரோட்டம் கட்டுப்படுத்தப்பட்டு உடமைகளின் இழப்பு தவிர்க்கப்படுகிறது.

8. இரசாயன கழிவுகளை தடுக்கிறது

வெள்ளப் பெருக்கினை தடுப்பதோடு நீரில் கலந்து வரும் பெட்ரோலியத்தின் நச்சு வேதிப் பொருட்கள், உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் ஆகியவற்றை ஓடச் செய்வதன் மூலம் குறைந்த ஆக்ஸிஜன் கொண்ட பகுதிகளை ஏற்படுத்துவதை தவிர்க்கின்றன.

9. நீர்த்தேக்கங்களை நிரப்புகின்றது

வனங்கள் இராட்சத பஞ்சுப் போல் ஓடுகின்ற மழை நீரை அதன் மேற்பரப்பில் முழுவதுமாக ஓடவிடாமல் நீரை உறிஞ்சிக் கொள்கின்றது. ஆனால், அனைத்து நீரையும் அதனால் ஈர்த்துக் கொள்ள முடியாது. வனங்களால் வடிகட்டிய நீர் வேர்களின் மூலமாக பாறைகளினிடையே சேமித்து வைக்கப்பட்டு நிலத்தடி நீரினை மேம்படுத்துவதோடு, குடிப்பதற்கும் விவசாயத்திற்கும் பயன்படும் வகையில் நீர்ப்பிடிப்பு பகுதிகளை நிரப்புகின்றது.

10. பெரும் காற்றினை தடுக்கிறது

காடுகளுக்கு அருகில் விவசாயம் செய்வது மிகுந்த பயன் அளிக்கக் கூடியதாகும். காட்டில் வாழும் வௌவால் மற்றும் பறவைகள் பூச்சிகளை உண்பதாலும், ஆந்தை மற்றும் நரிகள் எலிகளை வேட்டையாடுவதாலும் பயிர்கள் காக்கப்படுகின்றன. மரத் தொகுதிகள் காற்றுத் தடுப்பானாக செயல்படுவதன் மூலம் பயிர்களை பாதுகாக்கிறது. மேலும், குறைந்த காற்றை வழங்குவதன் மூலம் மகரந்த சேர்க்கை செய்வதற்கு தேனீக்களுக்கு எளிதாக உள்ளது.

11. நிலச்சரிவை தடுக்கின்றது

மரங்களினுடைய வேர்களின் கட்டமைப்பு, நீர் மற்றும் காற்றின் மூலமாக ஏற்படும் அரிப்பிற்கு எதிராக மிகப் பெருமளவில் மண்ணை நிலைநிறுத்தி ஒட்டுமொத்த சுற்றுச்சூழலின் அடித்தளத்தை பாதுகாக்கிறது. காடழிப்பினை ஏற்படுத்துவதோடு மட்டுமின்றி மண்ணரிப்பினை ஏற்படுத்தி அதன்மூலம் உயிர்வாழ்விற்கே அச்சுறுத்தலான நிலச்சரிவு மற்றும் மணல் புயல்களையும் தவிர்க்கிறது.

12. கழிவு நிலத்தை சுத்தமாக்குகிறது

மண்ணை நிலைநிறுத்துவதோடு மட்டுமின்றி பைட்டோமீடியேஷன் முறையில் சில மாசுகளையும்

சுத்தம் செய்கிறது. மரங்கள் நச்சுப் பொருட்களை உறிஞ்சிக் கொள்கின்றன அல்லது குறைந்த பாதிப்பை ஏற்படுத்துகின்ற காரணியாக மாற்றுகின்றன. இவ்வாறாக சாலையோரங்களில் வழிந்தோடுகின்ற கழிவு நீரை அல்லது அசுத்தமான நீரை மரங்கள் உறிஞ்சிக் கொள்கின்றன.

13. காற்றில் உள்ள நச்சுத் தன்மையை குறைக்கின்றது

காடுகள் கார்பன்–டை–ஆக்சைடு வாயுவை மிகப்பெரிய அளவில் உறிஞ்சிக்கொள்வதோடு மட்டுமின்றி காற்றில் உள்ள கார்பன் மோனாக்சைடு, சல்பர் டையாக்சைடு, நைட்ரஜன் டையாக்சைடு போன்ற காற்றை மாசுபடுத்துகின்ற வாயுக்களையும் ஈர்த்துக் கொண்டு காற்றில் உள்ள நச்சுத் தன்மையை குறைக்கின்றது.

14. ஒலி மாசுவைக் குறைக்கின்றது

ஒலியானது காற்றில் தன்னை இழக்கிறது. காடுகள் இயற்கையாகவே ஒலியினை தடுக்கும் அமைப்பாகும். இது காய்ந்த இலைகளின் சலசலப்பினால் ஏற்படுகின்றது. மேலும், பறவைகளின் ஒலியாலும் தடுக்குப்படுகின்றது. சரியான இடத்தில் அமைந்த சில மரங்களின் மூலம் ஒலியானது 5 முதல் 10 டெசிபல் அளவிற்கு குறைக்கப்படுகிறது. அல்லது மனித காதுகளால் கேட்கப்படுகின்ற அளவில் 50 சதவீதம் குறைக்கப்படுகின்றது.

15. நமக்கு உணவு அளிக்கிறது

மரங்கள் நமக்கு பழங்கள், கொட்டைகள், விதைகள் மற்றும் மரச்சாறுகள் ஆகியவற்றை வழங்குவதோடு வனத்திற்கு அருகில் காளான் போன்ற உணவுப் பொருட்களை வழங்குகிறது. மேலும் வனங்களில் வாழும் மான், முயல், வான்கோழி மற்றும் மீன்களுக்கு உணவாக காளான்கள், பெர்ரி ஆகியவை உள்ளன.

16. நம்மை குணமாக்குகின்றது

காடுகள் நமக்கு இயற்கை மருந்துகளை வழங்குகிறது. கோகோ வகை மரங்களிலிருந்து ஆஸ்துமா நோய்க்கு மருந்து பெறப்படுகிறது. ரெட் சிடார் மரத்திலிருந்து பெறப்படும் மருந்து தீமை விளைவிக்கும் பாக்டீரியாக்களை எதிர்த்து போராடுகிறது. மழைக் காடுகளில் உள்ள 70 சதவீத நமக்கு பரிட்சயமான தாவரங்களிலிருந்து புற்றுநோய்க்கான மருந்துகள் பெறப்படுகின்றன. மேலும் 1 சதவீத வெப்ப மண்டல மழைக்காடுகள் மருத்துவ பயன்பாட்டிற்கென ஆராய்ச்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. காடுகளினூடே நடந்து செல்லும் போது, மனிதர்களின் மன மற்றும் இரத்த அழுத்தங்கள் சரிசெய்யப்பட்டு நமது உடல் நலத்திற்கு வழிவகை செய்கிறது. மேலும், நமது நோய் எதிர்ப்பு சக்தியும் வலுவூட்டப்படுகிறது. மேலும், காடுகளில் உள்ள மரங்களினால் வெளியிடப்படும் ஃபைட்டான்சைடு மூலப்பொருளினால், நமது உடலில் வெள்ளையணுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு, அதன் மூலம் நாம் புற்று மற்றும் நோய் தொற்று செல்களிலிருந்து நம்மை காத்துக் கொள்ளலாம்.

17. பொருட்களை உருவாக்க பயன்படுகிறது

மரம் மற்றும் மரம் சார்ந்த பொருட்களின்றி மனிதனின் வாழ்வு எவ்வாறு சிறக்கும் ? நாம் உபயோகிக்கும் காகிதம், மரத்தளவாடங்கள், உடைகள் ஆகியவற்றிற்கென நீண்ட நெடுங்காலமாக புதுப்பிக்கத்தக்க வளமான காடுகளையே பயன்படுத்தி வருகிறோம். மரச் சாமான்களை அளிப்பதற்கு காரணமாகவுள்ள காடுகளை உருவாக்கியவர்களுக்கு நாம் நன்றி தெரிவிப்போம்.

18. வேலை வாய்ப்பினை உருவாக்குகின்றது

காடுகள், உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தில் மரச்சாமான்கள் மற்றும் அதன் உப பொருட்கள் தயாரிப்பில் 1 சதவீத பங்களிப்பினை அளிக்கிறது.

19. கம்பீரத்தை அளிக்கிறது

காடுகளின் பசுமையான நிழல், அமைதியான சூழல் ஆகியவை கலந்த இயற்கை அழகு மக்கள் மத்தியில் நன்மைகளை அறுவடை செய்கின்றன. எவ்வாறாயினும், வருங்கால பழமையான காடுகளை பாதுகாக்கவும், புதிய காடுகளை உருவாக்கவும் நாம் உறுதியளிக்க வேண்டும்.

20. ஆராய்ச்சி மற்றும் ஓய்வினை அளிக்கிறது

அறிவியலின் ஆரம்ப கால கட்டங்களில் காடுகளுக்கான நமது உள்ளார்ந்த ஈர்ப்பு, உயிர் சார்ந்த நிகழ்வானதாகவே கருதப்படுகிறது. காடுகளிலும் அதன் பகுதிகளிலும் அலைந்து திரிந்து ஆராய்வதன் மூலம் நம்மை ஊக்கப்படுத்திக் கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். காடுகள் நமது மூதாதையர்களுடனான அதிசய உணர்வினை தூண்டுகின்றன. காடுகளில் நமது நேரத்தினை செலவழிப்பது குறித்த விழிப்புணர்வு மக்களிடத்தில் அதிகரித்துள்ளது நன்றிக்குரியது. ஜப்பானியர்களின் வனக் குளியல் (shinrin-yoku) முறையின் கீழ் தற்போது மக்கள் அனைவரும் காடுகளில் நேரம் செலவிடுகிறார்கள்.

21. மரங்கள் சமூகங்களின் தூண்கள்

ஒரு பொருள் இருக்கும் வரையிலும் நாம் அதன் பெருமையினை உணர்வதில்லை. காடுகளும் இருக்கும் வரையில், அவற்றை நேசிப்பதிலேயும் புரிந்து கொள்வதிலேயும் நாம் அவற்றை உணர்ந்து கொள்கிறோம் என்பதை நம்மால் புரிந்து கொள்ளமுடியும்.

– **தெ. பாஸ்கர பாண்டியன்** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

கவிதைகள் தினத்தில் பாராட்டுவதும், நினைவு கூர்வதும் சமூகத்திற்கு நாம் செய்யும் பணிகளில் ஒன்றாகும்

இயற்கையோடும், சமூகத்தோடும் இணைந்தவர்களாகவே கவிஞர்கள் வாழ்கின்றனர். உலகம் முழுவதும் சிறந்த கவிஞர்கள் இருக்கின்றனர். பக்கம் பக்கமாக எழுத வேண்டிய கட்டுரையைக்கூட நான்கு வரியில் விளக்கக்கூடிய கவிதைகளை எழுதும் திறமை படைத்தவர்களாக கவிஞர்கள் இருக்கின்றனர். இரண்டு வரிகளைக்கொண்டு எழுதப்பட்ட திருக்குறள் உலகம் முழுவதும் போற்றக்கூடியதாக இருக்கிறது. இதுபோல்தான் அவரவர் தாய்மொழியில் கவிதைகள் எழுதி உலகப் புகழ் பெற்றுள்ளனர்.

எழுச்சி மிக்க கவிஞர்களின் படைப்புகள் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் மிக முக்கிய பங்காற்றி இருக்கிறது. புரட்சிக்கு வித்திட்டிருக்கிறது. நமது பாரதியின் கவிதைகள் எந்தளவிற்கு சுதந்திர தாகத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை அதனைப் படிக்கும்போதே தெரிந்து கொள்ளலாம். சமூகத்தில் நிகழும் அவலங்களை, குறைகளை நசுக்க எழுதும் கவிஞர்களையும் காணலாம். கவிதைகள் பொழுதுப் போக்கிற்காக மட்டும் அல்லாமல், சமூகத்தை பற்றிச் சிந்திக்கவும் தூண்டுகின்றன.

கவிதைகள் தினம்:

கவிதைகள் தினமானது 1930ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுவதாக நம்பப்படுகிறது. யுனெஸ்கோவானது மார்ச் 21, 1999ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் 30ஆவது பொது மாநாட்டை நடத்தியது. இந்த மாநாட்டில் உலக கவிதைகள் தினமாக மார்ச் 21ஐ கொண்டாடுமாறு அறிவித்தது. இதன் பின்னர் உலக கவிதைகள் தினம் ஐ.நா வின் உறுப்பு நாடுகள் சார்பாக அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தில் கவிதை எழுதவும், படிக்கவும், சிந்திக்கவும், பல கவிதை இயக்கங்கள் உதவுகின்றன. சர்வதேச அளவில் கவிஞர்களின் அமைப்புகள் பலப்படவும், கவிஞர்கள் ஒன்றுகூடி கூட்டாக செயல்படவும் இத்தினம் உதவிகரமாக இருக்கிறது. இத்தினத்தின்போது உலகின் சிறந்த கவிதைகளைப் பற்றி பேசப்படுகிறது.

கவிதை தினத்தின்போது கவிஞர்கள்கூடி ஒரு கவிதையை எழுதுவது, ஊக்கப்படுத்துவது, அதனை மற்றவர்கள் படிப்பது போன்ற செயல்கள் நடக்கின்றன. கனடாவில் நடந்த தேசிய நூலகத்தினரால் 2000ஆம் ஆண்டில் உலக கவிதைகள் தினம் கொண்டாடப்பட்டது. இவ்விழாவின்போது 1,500 கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டனர். 1826 முதல் 1925 வரை 100 ஆண்டுகளில் வெளியான சிறந்த கவிதைகளைத் தொகுத்தே இந்த கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது.

இந்த கவிதைத் தொகுப்பானது ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச் மொழிகளிலும் வெளியிடப்பட்டது. உலகின் சிறந்த கவிஞர்களான ம.ஈ.பாலின் நெல்லிகன், சார்லஸ் ஜி.டி., ராபர்ட்ஸ், ஆக்டோவ் கிரிமைஸ், டன்கேன் கேம்பல் ஸ்காட் போன்றவர்களின் கவிதைகளும் இத்தொகுப்பில் இடம் பெற்று உள்ளது.

கவிதைகள் புதிய தலைமுறைக்கான ஒரு வழிகாட்டியாகவும் இருக்கும். சமூகத்திற்காக படைக்கப்படும் கவிதைகள் மட்டுமே காலம் முழுவதும் நிலைத்து நிற்கின்றன. அப்படிப்பட்ட கவிஞர்களை, கவிதைகள் தினத்தில் பாராட்டுவதும், நினைவு கூர்வதும் சமூகத்திற்கு நாம் செய்யும் பணிகளில் ஒன்றாகும்.

நன்றி: **சர்வதேச தினங்கள் எனும் நூலிலிருந்து...**

தண்ணீர் என்பது நமது உரிமை அதனைப் பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமை

நமது பூமியில் உயிர்கள் வாழ்வதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது தண்ணீர்தான். தண்ணீர் இல்லையேல் உயிர்கள் இல்லை. குடிப்பதற்கு மட்டும்தான் தண்ணீர் தேவைப்படுகிறது எனக் கூறிவிட முடியாது. விவசாயம் செய்வதற்கும், மின்சாரம் தயாரிப்பதற்கும், தொழிற்சாலைகளை இயக்குவதற்கும், உடைகளைத் தயாரிப்பதற்கும் கூட தண்ணீர் மிக அவசியம். நிலத்திற்கு நீர் இல்லை என்றால் நமக்கு உணவு கிடைக்காது. ஒரு நாடு செழிப்பாக இருக்க நீர் மிகமிக அவசியமாகும். நீர்தான் அடிப்படை. அதற்கு ஈடுஇணை ஏதும் இல்லை. தண்ணீருக்கு மாற்று ஏதும் இல்லை என்பதை மறந்து விடக் கூடாது.

இந்த பூமி இரண்டு பங்கு நீரால் சூழப்பட்டு இருக்கிறது. பூமியில் காணப்படும் நீரில் 97 சதவிகிதம் உப்பு நீரால் ஆனது. மீதி 3 சதவிகிதம் மட்டும்தான் நல்ல நீர். சுத்தமான நீர்கூட துருவப்பகுதியில் பனிக்கட்டியாக இருக்கிறது. சுமார் ஒரு சதவீதம் நீர்தான் நாம் பயன்படுத்தக்கூடிய நீராக இருக்கிறது. சுமார் 0.5 சதவிகித நீர் ஏரி, ஆறுகளில் உள்ளது. மீதி 0.5 சதவிகித நீர் நிலத்தடி நீராக இருக்கிறது. கிடைக்கும் சுத்தமான தண்ணீரில் 80 சதவிகிதம் விவசாயத்திற்கும், தொழிற்சாலை உபயோகத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

தண்ணீரின் அவசியத்தை உணர்ந்தும், மக்கள் தண்ணீருக்காக அவதிப்படுவதை உணர்ந்தும் ஐ.நா. சபை சர்வதேச தண்ணீர் தினத்தை கொண்டாடுமாறு மார்ச் 22ஐ அறிவித்துள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக்கான மாநாடு 1992ஆம் ஆண்டில் ரியோ–டி–ஜெனிரோவில் நடந்தது. அந்த மாநாட்டில்தான் தண்ணீரின் முக்கியத்துவத்தைப் பற்றி பரிந்துரைக்கப்பட்டது. உலக நாடுகள் மக்களின் குடிநீர் தேவைகளை உணர்ந்து, மக்களும் தங்களின் தண்ணீர் தேவையை உணர்ந்து அதனை பாதுகாப்பது, தண்ணீர் தேவை மீது கவனம் செலுத்துவது என வலியுறுத்தப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஐ.நா. சபை டிசம்பர் 1992ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்த தீர்மானத்தின்படி, உலக நாடுகள் அனைத்தும் 1993ஆம் ஆண்டு முதல் மார்ச்–22ஐ உலக தண்ணீர் தினமாக கொண்டாடுகின்றன.

தண்ணீர் வற்றாத செல்வம், அதை வீணாக்கக்கூடாது. சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். தண்ணீர் இலவசமாக கிடைக்கிறது என்கிற நிலை படிப்படியாக மாறிக்கொண்டே செல்கிறது. தண்ணீர் என்பது உலக மக்களின் பொதுச் சொத்து. அதனை வியாபாரம் ஆக்குவதை மக்களாகிய நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

தண்ணீருக்கு மாற்றாக வேறு எந்த ஒரு பொருளையும் நாம் பயன்படுத்த முடியாது. வேறு மாற்று பொருளையும் கண்டறிய முடியாது. தண்ணீர் என்பது நமது ஜீவதார உரிமை, அதனைப் பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்.

நன்றி: **சர்வதேச தினங்கள் எனும் நூலிலிருந்து...**

உலக மகிழ்ச்சி தினம்

மகிழ்ச்சி எது எனக் கேட்டால் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு அர்த்தத்தைக் கூறுவார்கள். போரையும், வறுமையையும் உலகளவில் முடிவுக்குக் கொண்டுவருவதே மகிழ்ச்சி என ஐ.நா. சபை கருதுகிறது. உலகெங்கிலும் உள்ள மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காகவே ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 20 ஆம் தேதியை சர்வதேச மகிழ்ச்சி தினமாக கொண்டாடுகிறது.

அனைவருக்கும் மகிழ்ச்சியை தரவேண்டும் என்பதுதான் சர்வதேச மகிழ்ச்சி தினத்தின் கருப்பொருள். மகிழ்ச்சியே மனிதனின் அடிப்படை இலட்சியம் என்கிற அடிப்படையில் ஐ.நா. பொதுச்சபை 2012ஆம் ஆண்டு ஜூலை 12 அன்று மார்ச் 20ஐ சர்வதேச மகிழ்ச்சி தினமாக உலகெங்கும் அறிவித்தது.

மகிழ்ச்சி குறிப்பாக பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சிறந்த மற்றும் மிகவும் சீரான அணுகுமுறையைக் கொண்டுவர முடியும், இது நிலையான வளர்ச்சியை முன்னறிவிக்கிறது, வறுமையை சமாளிக்கிறது மற்றும் தனிப்பட்ட மற்றும் சமூக நல்வாழ்வை அதிகரிக்கிறது. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு கிழக்கு ஆசிய நாடான பூட்டான், 1990களில் மொத்த தேசிய உற்பத்தியில் மொத்த தேசிய மகிழ்ச்சி என்ற கருத்தை ஏற்றுக்கொண்டது, பொருளாதார வளர்ச்சி தொடர்பான அனைத்து முடிவுகளிலும் அதன் குடிமக்களின் மகிழ்ச்சிக்கு முன்னுரிமை அளித்தது.

நல்ல தரமான உறவுகள் நம் மகிழ்ச்சிக்கு முக்கியம், எனவே அன்புக்குரியவர்களுடன் நேரத்தை செலவிடுங்கள். மேம்பட்ட வாழ்க்கைத் தரத்திற்கான மற்றொரு எளிய உதவிக்குறிப்பு, அளவான தூக்கத்தைப் பெறுவது, நம் மனம் மற்றும் உடல் புத்துணர்ச்சியுடன் இருப்பதை உணரலாம்!

பயன்கள் :

- சந்தோஷத்துடன் கூடிய சிரிப்பு மாரடைப்பு ஏற்படுவதை தடுக்கிறது.
- இரத்தக்கொதிப்பு இல்லாமல் இரத்த அழுத்தத்தை சீராக வைக்க நகைச்சுவை உதவுகிறது.
- சிரிப்பும் ஆழமான நகைச்சுவையும் உடல் மனம் மூளை ஆகியவற்றின் ஆற்றலும்
- மேம்படும் உடல் வலியின் வீரியத்தை உடனே குறைக்க சிரிப்பு அருமருந்து.

பிச்சாவரம்

நிலத்திற்குள் கடல் வந்து முத்தமிடும் கழிமுகம் இது. இங்கு 11,000 ஏக்கர் பரப்பளவில் சுரபுன்னைக் காடுகள் பரந்து விரிந்து கிடக்கின்றன. இங்கு பல வகையான மீன்களை உண்டு மகிழலாம். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகள், அழகிய குடில்கள், உணவு விடுதி, படகுப் பயணம் என்று பிச்சாவரத்தை மிச்சமின்றி ரசித்து மகிழ பல வசதிகள் உள்ளன.

தொலைபேசி எண்– 04144–249232.

உலக காசநோய் தினம்

காசநோய் ஒரு தொற்றுநோயாகும். இந்நோய் முதலில் மூச்சுக் குழல், நுரையீரல் ஆகியவற்றைப் பாதிக்கும். இந்நோயின் முக்கிய அறிகுறிகள் இருமல், சுவாசிக்க சிரமமாகவும், மூச்சுத் திணறுலும் ஏற்படும். சுவாசிக்கும்போது விசில் அடிப்பது போன்ற சப்தம் வெளிப்படும். மெதுவாகவே சுவாசிக்க முடியும். மூச்சை உள்ளே இழுப்பதற்கும், வெளியே விடுவதற்கும் சிரமமாக இருக்கும்.

இந்நோய் ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு எளிதில் தும்மல், இருமல், அல்லது பேசுவதன் மூலமாகவும் பரவுகிறது. இது நுரையீரலைத் தவிர பிற உறுப்புகளையும் பாதிக்கும். எலும்புகள், சிறுநீரகம், முதுகு எலும்பு போன்றவற்றையும் பாதிக்கும்.

இந்நோய் திடீரென்று ஏற்பட்டு கடுமையாகி விடும். இதன் பாதிப்பு இரவில்தான் அதிகம் தெரியும். அப்போது, மூச்சுத்திணறல் ஏற்படும். காசநோயால் பாதிக்கப்பட்டவர் உயிருடன் கடைசிவரை வாழ முடியும். இந்த நோய் வாழ்நாள் முழுக்க கூடவே இருக்கும் இவர்கள் வெளிப்புறத் தோற்றத்தில் ஆரோக்கியம் கொண்டவர்களாக தெரிவார்கள். ஆனால், உடலின் நோய் பரப்பும் கிருமிகளுடன் இருப்பார்கள்.

காசநோய் தினம்

டாக்டர் ராபர்ட் கோச் மார்ச் 24, 1882ஆம் ஆண்டில் காசநோய்க்கு காரணமான கிருமியைக் கண்டுபிடித்தார். இதுவே இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தினம் கொண்டாட காரணமாக அமைந்தது. 1992ஆம் ஆண்டில் ஒரு நூற்றாண்டு கடந்த பிறகு இத்தினம் உலக சுகாதார அமைப்பாலும், சர்வதேச காசநோய் மற்றும் நுரையீரல் நோய் தடுப்பு அமைப்பாலும் நடத்தப்பட்டது.

இதன் பலனாக காசநோய் வளரும் நாடுகளின் பொருளாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பது கண்டறியப்பட்டது. உலக சுகாதாரத்திற்கு எந்தளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை அறிய முடிந்தது.

காசநோயால் ஏற்படும் விளைவுகள் மற்றும் பாதிப்புகளைக் குறைக்கும் வகையில் இத்தினத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நம் நாடு பல்வேறு நாடுகளுடன் இணைந்து காசநோய்க்கு எதிராக போராடுகிறது. பலருக்கு இந்நோயைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இதனை ஐ.நா. சபையின் உலக சுகாதார நிறுவனம் செய்து வருகிறது.



நன்றி: **சர்வதேச தினங்கள் எனும் நூலிலிருந்து...**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்கள் 2021 மற்றும் கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத் தேர்தல்

தேர்தல் நடைபெறும் நாள்
ஏப்ரல் 06 2021

வாக்கு எண்ணிக்கை நாள்
மே 02 2021

இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்கள், 2021 மற்றும் 39. கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத் தேர்தலை நடத்த கீழ்க்காணும் காலஅட்டவணையை அறிவித்துள்ளது:–

தேர்தலுக்கானஅறிவிக்கை வெளியிடும் நாள் (மற்றும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான ஆரம்ப நாள்)	12.03.2021 (வெள்ளிக்கிழமை)
வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய கடைசி நாள்	19.03.2021 (வெள்ளிக்கிழமை)
பெறப்பட்ட வேட்புமனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நாள்	20.03.2021 (சனிக்கிழமை)
வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான கடைசி நாள்	22.03.2021 (திங்கட்கிழமை)
வாக்குப்பதிவு நாள்	06.04.2021 (செவ்வாய்க்கிழமை)
வாக்கு எண்ணிக்கை நாள்	02.05.2021 (ஞாயிற்றுக்கிழமை)
தேர்தல் நடைமுறைகள் முடிவுபெறும் நாள்	04.05.2021 (செவ்வாய்க்கிழமை)

மேற்கண்ட தேர்தலுக்கான தேர்தல் நன்னடத்தை விதி (Model Code of Conduct) 26.02.2021 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த நன்னடத்தை விதி அனைத்து வேட்பாளர்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் மற்றும் மத்திய / மாநில அரசுகளுக்கும் பொருந்தும்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் 2021

திருவள்ளூர் மாவட்டம்

1. கும்மிடிப்பூண்டி (1)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	330
ஆண் வாக்காளர்கள்	:	1,37,027
பெண் வாக்காளர்கள்	:	1,43,708
மற்றவை	:	41
மொத்த வாக்காளர்கள்	:	2,80,776

2. பொன்னேரி (தனி) (2)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	310
ஆண் வாக்காளர்கள்	:	1,30,689
பெண் வாக்காளர்கள்	:	1,36,953
மற்றவை	:	31
மொத்த வாக்காளர்கள்	:	2,67,673

3. திருத்தணி (3)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	329
ஆண் வாக்காளர்கள்	:	1,41,923
பெண் வாக்காளர்கள்	:	1,48,501
மற்றவை	:	28
மொத்த வாக்காளர்கள்	:	2,90,452

4. திருவள்ளூர் (4)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	296
ஆண் வாக்காளர்கள்	:	1,33,608
பெண் வாக்காளர்கள்	:	1,41,055
மற்றவை	:	26
மொத்த வாக்காளர்கள்	:	2,74,689

5. பூவிருந்தவல்லி (தனி) (5)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	387
ஆண் வாக்காளர்கள்	:	1,75,953
பெண் வாக்காளர்கள்	:	1,81,861
மற்றவை	:	60
மொத்த வாக்காளர்கள்	:	3,57,874

6. ஆவடி (6)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	427
ஆண் வாக்காளர்கள்	:	2,18,538
பெண் வாக்காளர்கள்	:	2,21,369
மற்றவை	:	98
மொத்த வாக்காளர்கள்	:	4,40,005

7. மதுரவாயல் (7)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	421
ஆண் வாக்காளர்கள்	:	2,26,245
பெண் வாக்காளர்கள்	:	2,22,464
மற்றவை	:	142
மொத்த வாக்காளர்கள்	:	4,48,851

8. அம்பத்தூர் (8)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	349
ஆண் வாக்காளர்கள்	:	1,91,502
பெண் வாக்காளர்கள்	:	1,91,418
மற்றவை	:	95
மொத்த வாக்காளர்கள்	:	3,83,015

9. மாதவரம் (9)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	467
ஆண் வாக்காளர்கள்	:	2,24,322
பெண் வாக்காளர்கள்	:	2,26,288
மற்றவை	:	106
மொத்த வாக்காளர்கள்	:	4,50,717

10. திருவொற்றியூர் (10)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	306
ஆண் வாக்காளர்கள்	:	1,50,309
பெண் வாக்காளர்கள்	:	1,54,323
மற்றவை	:	145
மொத்த வாக்காளர்கள்	:	3,04,777

சென்னை மாவட்டம்

11. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் (11)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	247
ஆண் வாக்காளர்கள்	:	1,26,744
பெண் வாக்காளர்கள்	:	1,35,889
மற்றவை	:	105
மொத்த வாக்காளர்கள்	:	2,62,738

12. பெரம்பூர் (12)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	297
ஆண் வாக்காளர்கள்	:	1,55,049
பெண் வாக்காளர்கள்	:	1,60,088
மற்றவை	:	71
மொத்த வாக்காளர்கள்	:	3,15,208

13. கொளத்தூர் (13)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	238
ஆண் வாக்காளர்கள்	:	1,38,181
பெண் வாக்காளர்கள்	:	144,050
மற்றவை	:	68
மொத்த வாக்காளர்கள்	:	2,82,229

14. வில்லிவாக்கம் (14)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	247
ஆண் வாக்காளர்கள்	:	1,25,030
பெண் வாக்காளர்கள்	:	1,29,899
இதர வாக்காளர்கள்	:	63
மொத்த வாக்காளர்கள்	:	2,54,992

15. திரு.வி.க. நகர் (தனி) (15)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	205
ஆண் வாக்காளர்கள்	:	1,07,090
பெண் வாக்காளர்கள்	:	1,13,676
மற்றவை	:	52
மொத்த வாக்காளர்கள்	:	2,20,818

16. எழும்பூர் (தனி) (16)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	169
ஆண் வாக்காளர்கள்	:	95,253
பெண் வாக்காளர்கள்	:	96,959
மற்றவை	:	53
மொத்த வாக்காளர்கள்	:	1,92,265

17. ராயபுரம் (17)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	181
ஆண் வாக்காளர்கள்	:	93,475
பெண் வாக்காளர்கள்	:	97,673
மற்றவை	:	54
மொத்த வாக்காளர்கள்	:	1,91,206

18. துறைமுகம் (18)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	177
ஆண் வாக்காளர்கள்	:	91,936
பெண் வாக்காளர்கள்	:	84,281
மற்றவை	:	55
மொத்த வாக்காளர்கள்	:	1,76,272

19. சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி (19)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	220
ஆண் வாக்காளர்கள்	:	1,15,080
பெண் வாக்காளர்கள்	:	1,19,204
மற்றவை	:	35
மொத்த வாக்காளர்கள்	:	2,34,319

20. ஆயிரம் விளக்கு (20)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	239
ஆண் வாக்காளர்கள்	:	1,18,537
பெண் வாக்காளர்கள்	:	1,23,965
மற்றவை	:	95
மொத்த வாக்காளர்கள்	:	2,42,579

21. அண்ணா நகர் (21)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	255
ஆண் வாக்காளர்கள்	:	1,40,410
பெண் வாக்காளர்கள்	:	1,45,522
மற்றவை	:	87
மொத்த வாக்காளர்கள்	:	2,86,019

22. விருகம்பாக்கம் (22)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	270
ஆண் வாக்காளர்கள்	:	1,45,167
பெண் வாக்காளர்கள்	:	1,45,961
மற்றவை	:	90
மொத்த வாக்காளர்கள்	:	2,91,218

23. சைதாப்பேட்டை (23)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	257
ஆண் வாக்காளர்கள்	:	1,37,073
பெண் வாக்காளர்கள்	:	1,42,414
மற்றவை	:	75
மொத்த வாக்காளர்கள்	:	2,79,562

24. தியாகராயநகர் (24)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	229
ஆண் வாக்காளர்கள்	:	1,20,734
பெண் வாக்காளர்கள்	:	1,23,905
மற்றவை	:	47
மொத்த வாக்காளர்கள்	:	2,44,686

25. மைலாப்பூர் (25)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	262
ஆண் வாக்காளர்கள்	:	1,30,621
பெண் வாக்காளர்கள்	:	1,38,739
மற்றவை	:	40
மொத்த வாக்காளர்கள்	:	2,60,400

26. வேளச்சேரி (26)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	261
ஆண் வாக்காளர்கள்	:	1,55,197
பெண் வாக்காளர்கள்	:	1,58,473
மற்றவை	:	91
மொத்த வாக்காளர்கள்	:	3,13,761

செங்கல்பட்டு மாவட்டம்

27. சோழிங்கநல்லூர் (27)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	616
ஆண் வாக்காளர்கள்	:	3,48,262
பெண் வாக்காளர்கள்	:	3,46,476
மற்றவை	:	107
மொத்த வாக்காளர்கள்	:	6,94,845

28. பல்லாவரம் (30)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	437
ஆண் வாக்காளர்கள்	:	2,16,439
பெண் வாக்காளர்கள்	:	2,18,696
மற்றவை	:	42
மொத்த வாக்காளர்கள்	:	4,35,177

29. தாம்பரம் (31)

வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை	:	416
ஆண் வாக்காளர்கள்	:	2,05,751
பெண் வாக்காளர்கள்	:	2,07,748
மற்றவை	:	53
மொத்த வாக்காளர்கள்	:	4,13,552

30. செங்கல்பட்டு (32)

